# 9. இந்திய தேசிய காங்கிரஸ், 1885-1905

> காங்கிரஸ் இந்தியாவின் பழம்பெரும் அமைப்பாகும். இது உண்மையிலேயே ஒரு தேசிய நிறுவனம். காங்கிரஸ் ஒரு குறிப்பிட்ட வகுப்பாரையோ அல்லது ஒருசாராரின் நலன்களையோ காப்பதற்காக ஏற்பட்டதல்ல.
>
> - மகாத்மா காந்தி.

இந்திய தேசிய காங்கிரசின் தோற்றம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். மேற்கத்தியப் பண்பாட்டுத் தாக்கம்; இந்திய சமுதாய, சமய மறுமலர்ச்சி, பத்திரிகை, இலக்கிய வளர்ச்சி; ஆங்கிலேய அதிகார வர்க்கத்தின் ஆதிக்கப் போக்கு; அரசாங்கத்தின் பொருளாதாரச் சுரண்டல் கொள்கை ஆகியவற்றின் விளைவாக இந்தியர்களிடையே தேசிய உணர்ச்சி உருவானது. வங்காளம், பம்பாய், சென்னை ராஜதானிகளில் துவக்கப்பட்ட அரசியல் சார்ந்த அமைப்புகள் இந்திய தேசியத்தின் வடிகால்களாக அமைந்தன. இப்போக்கின் இயல்பான விளைவே இந்திய தேசிய காங்கிரசின் தோற்றமாகும். காங்கிரஸ் துவக்கப்பட்ட பின்னர் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது.

## காங்கிரசின் தோற்றம்

இந்திய அரசியல் வானில் இந்திய தேசிய காங்கிரஸ் தோன்றியதற்கான சூழ்நிலைகள், காரணங்கள் பற்றிய ஒருமித்த கருத்தில்லை. வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் காங்கிரசின் தோற்றத்தைப் பற்றிப் பல்வேறு விளக்கங்களைக் கொடுத்துள்ளார்கள். அவற்றுள் முக்கிய விளக்கங்கள் வருமாறு:

### இயல்பான தோற்றம்

காங்கிரசின் தோற்றம் இயல்பானது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவின் பல்வேறு இடங்களில் துவக்கப்பட்ட அரசியல் சார்ந்த அமைப்புகளின் தவிர்க்க முடியாத இயற்கையான விளைவே காங்கிரசின் தோற்றமாகும். ஆங்கிலேய ஆட்சியின் ஆதிக்கப் போக்கு, அதற்கெதிராக ஏற்பட்ட கிளர்ச்சிகள், இந்திய மறுமலர்ச்சி, தேசியம் பல்வேறு ராஜதானி அமைப்புகள் ஆகியவை காங்கிரஸ் தோன்றுவதற்கான சூழ்நிலையை உருவாக்கின. ரிப்பன் பிரபுவின் தாராளக் கொள்கைகளை ஐரோப்பியர்கள் தீவிரமாக எதிர்த்ததால் தேசிய உணர்வுமிக்க இந்தியர்கள் அகில இந்திய அரசியல் அமைப்பின் இன்றியமையாமையை உணர்ந்தனர். அத்தகைய அமைப்பைத் தோற்றுவித்தனர். காலத்தின் கட்டாயம் அது. அன்னை இந்தியா இயல்பாக ஈன்றெடுத்த தேசியக் குழந்தையே காங்கிரஸ் ஆகும்.

### டஃபரின் பிரபுவின் பங்கு

காங்கிரஸ் தோன்றுவதற்கு இந்திய வைசிராய் டஃபரின் பிரபு (Lord Dufferin, 1884-88)வே காரணகர்த்தா என்று லாலா லஜபதிராய் கருதினார். காங்கிரஸ் அவரது 'கருத்துக் குழந்தை' என்றும், அவரே 'காங்கிரசின் ஞானத் தந்தை' என்றும் கூறப்படுகிறது. அரசாங்கத்துக்கும் மக்களுக்குமிடையே ஒரு இணைப்புப் பாலமாக இருக்கக்கூடிய தேசிய அமைப்பை அமைக்குமாறு டஃபரின் பிரபு தன்னைக் கலந்தாலோசித்த ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (A.O. Hume) கூறியதாகவும், அந்த ஆலோசனையைச் சிரமேற்கொண்டு ஹியூம் இந்திய தேசிய காங்கிரசைத் தோற்றுவித்தார் என்றும் சொல்லப்படுகிறது. அத்தகைய அமைப்பின்மூலம் மக்களுக்கு அரசாங்கத்தின் கொள்கைகளையும் எடுத்துக்கூற முடியும் என்றும், அவை பற்றிய மக்களின் கருத்துக்களை அறியவும் உதவியாக இருக்கும் என்றும் கருதியதாலேயே அகில இந்திய அமைப்பு உருவானது என்பதே இந்த வாதத்தின் சாரமாகும்.

### ஹியூமின் பங்கு

ஆலன் ஆக்டேவியன் ஹியூம்தான் காங்கிரஸ் தோன்றுவதற்கு முழு முதற்காரணம் என்று பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. காங்கிரசின் முதல் தலைவரான டபிள்யு.சி. பானர்ஜி (W.C.Bonnerjee) ஹியூமைக் 'காங்கிரசின் தந்தை' என்று வர்ணித்தார். இந்திய அரசு பணியிலிருந்த ஹியூம் அரசாங்கச் சார்பற்ற ஆதாரங்களின் அடிப்படையில் இந்தியாவில் 1857ல் ஏற்பட்ட கிளர்ச்சியைவிட மோசமான கொந்தளிப்பு ஏற்படக்கூடும் என்று அறிந்து, அத்தகைய ஆபத்தைத் தவிர்க்கவே காங்கிரசைத் தோற்றுவித்தார் என்று கருதப்படுகிறது. 1877 பஞ்சத்துக்குப்பின் மக்களிடையே எழுந்த ஏமாற்றமும், கற்றோரின் அந்நியப்பட்ட நிலையும் அவரது முடிவை உறுதி செய்தன. மக்களின் சீற்றத்துக்குத் தக்க வடிகாலமைப்பதே பிரிட்டிஷ் பேரரசின் நலனுக்கு உகந்தது என்றுணர்ந்த ஹியூம் காங்கிரசைத் துவக்கினார். மேலும் அத்தகைய அமைப்பு இங்கிலாந்தில் உள்ளது போன்ற அரசாங்கத்தின் பொறுப்பான எதிர்க் கட்சியாகச் செயல்படலாமென்றும், இந்திய சமுதாயப் பிரச்னைகளை விவாதிக்கலாமென்றும் அரசாங்கச் சார்பற்றோருக்குமிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தலாமென்றும் ஹியூம் நினைத்தே காங்கிரசைத் தோற்றுவித்தார்.

### ரஷ்யப் படையெடுப்புப் பயம்

டஃபரின் பிரபு இந்திய வைசிராயாகப் பொறுப்பேற்ற போது ரஷ்யா இந்தியாவை எந்த நேரத்திலும் தாக்கக்கூடும் என்ற பயமிருந்தது. ரஷ்யா ஹீரட்டைத் தாக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்தியர்கள் இந்தியாவிலிருந்து ஐரோப்பியர், பத்திரிகையாளர்கள் ரஷ்ய அபாயம் கண்டு அஞ்சினர். ரஷ்யத் தாக்குதலை முறியடிக்கத் தங்களது முழு ஆதரவை அரசாங்கத்துக்குத் தந்தனர். ரஷ்யப் படையெடுப்புக்கு எதிராக இந்தியாவில் 'தொண்டர் படை இயக்கம்' (Volunteer Corps Movement) தீவிரமாகத் துவக்கப்பட்டது. எனவே ரஷ்யப் படையெடுப்பு பற்றிய பயமே (Russophobia) காங்கிரஸ் தோன்றுவதற்கான உடனடியான உந்து சக்தியாக இருந்தது.

### கற்றறிந்தோர் அரசாங்கக் கூட்டு முயற்சி

1870களிலும், 1880 துவக்கத்திலும் இந்தியாவில் புரட்சி ஏற்படுவதற்கான சூழ்நிலை இருந்தது. ஆங்கிலேய அரசாங்கத்துக்கெதிராக மக்களும் மனக்கசப்படைந்திருந்தனர். கற்றோரும் வெறுப்புற்றிருந்தனர். இல்பர்ட் மசோதா பற்றிய போராட்டம் இந்தியாவில் பதட்ட நிலையைத் தோற்றுவித்திருந்தது. கற்றோர் கூட்டம் மக்கள் இயக்கத்துக்குத் தலைமை தாங்கிப் போராடினால் இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி ஆட்டங் கண்டுவிடும் என்று அஞ்சிய அரசாங்கம் கற்றறிந்தோருடன் கூட்டுச் சேர்ந்து, காங்கிரஸ் துவக்கப்படுவதை ஆதரித்தது. அதாவது கற்றோர் கூட்டத்தைப் பாமரர்களிடமிருந்து பிரிக்கும் நோக்கத்துடனேயே காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது. அம்முயற்சியில் அது வெற்றி பெறவும் செய்தது. அதனால்தான், துவக்க காலத்தில் காங்கிரஸ் மேல்தட்டு மக்களின் கருவியாகச் செயல்பட்டது எனலாம். இது ஒரு சாரரின் வாதம்.

### பிரம்மஞான சபையின் பங்கு

இந்திய தேசிய காங்கிரஸ் தோன்றுவதற்குப் பிரம்மஞான சபை (Theosophical Society) பெரிதும் காரணமாக இருந்தது என்று வாதிக்கப்படுகிறது. அச்சபை இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பிரநிதிகளை ஒன்றுகூட்டி நாட்டின் பொதுப்பிரச்னைகளை விவாதித்தது என்பதில் ஐயமில்லை. 1884 டிசம்பர் மாதம் சென்னையிலிருந்து ரகுநாதராவின் இல்லத்தில் அத்தகைய ஒரு கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டமே இந்திய தேசிய காங்கிரஸ் பின்னர் பம்பாயில் கூடுவதற்குக் காரணமாயிருந்தது என்று உரிமை கொண்டாடப்படுகிறது. பிரம்ம ஞான சபையின் விளைவே காங்கிரஸ் என்று வாதிட்டார் அன்னிபெசண்ட் அம்மையார். பேராசிரியர் கு.ராஜய்யனும் இரகுநாத ராவ் இல்லத்தில் நடந்த கூட்டமே தேசியக் காங்கிரசைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியதாக கருதுகிறார்.

### மதிப்பீடு

தேசத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகத் துவக்கப்பட்ட அமைப்பே இந்திய தேசிய காங்கிரஸ். அதற்குமுன் துவக்கப்பட்ட பல அரசியல் அமைப்புகளின் உச்சக்கட்டமாக உருவானது காங்கிரஸ். காங்கிரசின் வரலாற்றை எழுதிய பி. பட்டாபி சீத்தாராமையா காங்கிரசின் தோற்றம் ஒரு மர்மமாகவே உள்ளது என்று எழுதியுள்ளார். காங்கிரசின் தோற்றத்தில் எவ்வித மர்மமும் இல்லை. தற்கால இந்திய வரலாற்றின் தவிர்க்க இயலாத இயல்பான விளைவே காங்கிரஸ். அகில இந்திய அமைப்பைத் துவக்கும் போட்டியில் ஹியூம் தனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்திக் காங்கிரசைத் தோற்றுவிப்பதில் முந்திக் கொண்டார், அவ்வளவே.

ஹியூம் பிரிட்டிஷ் பேரரசுக்கும் விசுவாசமாயிருந்து கொண்டு இந்தியருக்கும் நன்மை செய்ய வேண்டும் என்ற இரசவாத வித்தையை நிகழ்த்தப் பார்த்தார். இவ்விரண்டும் மணலும் சர்க்கரையும் போன்றவை; இரண்டறக் கலக்க முடியாது. எனினும், ஹியூமின் முயற்சியால்தான் காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது என்பதில் இரு வேறு கருத்து இருக்க முடியாது. 1882ல்

இந்திய அரசாங்கப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற ஹியூம் ஒரு அகில இந்திய அமைப்பைத் தோற்றுவிக்க அரும்பாடு பட்டார். 'முதியவரின் நம்பிக்கை' என்ற நூலில் இந்தியர்களின் இன்னல்களையும் இடர்பாடுகளையும் ஆங்கிலேய ஆட்சி அசட்டை செய்யக்கூடாதென எச்சரித்தார். வைசிராய் டஃபரினைச் சந்தித்து அரசியல் சார்ந்த அமைப்பை ஏற்படுத்துவதுபற்றி ஆலோசனை நடத்தினார். 1883 மார்ச் முதல் தேதி கல்கத்தா பல்கலைக் கழகப் பட்டதாரிகளுக்கு எழுதிய கடிதத்தில் கடுகு விதைகளைப்போன்று ஐம்பது தன்னலங்கருதாத, தியாகம் செய்யக்கூடிய இந்தியர்களைக் கொண்ட அமைப்பை ஏற்படுத்த வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தினார். இந்தியத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டார். 1885 டிசம்பர் மாதம் இந்தியப் பிரதிநிதிகளைக் கொண்ட கூட்டத்தைக் கூட்டுவதென மார்ச் மாதமே முடிவு செய்தார். இதற்கிடையே ஹியூம் இங்கிலாந்து சென்று ரிப்பன் பிரபு, ஜான் பிரைட், ஆர்.டி.ரீட் போன்றோரைச் சந்தித்துத் தன் முயற்சிக்கு அவர்களது ஆதரவை நாடினார். இந்தியாவில் நடக்கவிருந்த மாநாடுபற்றிய விவரங்களை இங்கிலாந்தின் பத்திரிகைகளில் பிரசுரிக்க ஏற்பாடுகளைச் செய்தார். இந்தியா திரும்பிய ஹியூம் வெற்றிகரமாக இந்திய தேசிய காங்கிரசைத் துவக்கினார். எனவே காங்கிரஸ் தோன்றுவதற்கு ஹியூம் தனிப் பொறுப்பேற்றார் என்பதில் சந்தேகத்துக்கிடமில்லை. காங்கிரசின் தோற்றத்துக்காகக் கூறப்படும் பிற காரணங்கள் அனைத்தும் தேசிய அரசியல் அமைப்பு ஏற்படுவதற்கான சூழ்நிலையையும், பின்புலத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தன.

### காங்கிரசின் முதல் கூட்டம், 1885

இந்திய தேசிய யூனியன் (Indian National Union) என்ற பெயர் தாதாபாய் நௌரோஜியின் யோசனைப்படி இந்திய தேசிய காங்கிரஸ் (Indian National Congress) என்று மாற்றப்பட்டது. அதன்முதல் கூட்டம் 1885 டிசம்பர் 28ம் நாள் பம்பாய் கோகுல்தாஸ் தேஜ்பால் சமஸ்கிருதக் கல்லூரியின் மண்டபத்தில் துவக்கப்பட்டது. கல்கத்தாவின் பிரபல வழக்கறிஞரான உமேஷ் சந்திர பானர்ஜி (W.C. Bonnerjee) காங்கிரசின் முதல் தலைவராக ஒரு மனதுடன் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆலன் ஆக்டேவியன் ஹியூம் அதன் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அப்பதவியில் அவர் 1906 வரை நீடித்தார். காங்கிரசின் முதல் கூட்டத்தில் ஆங்கிலத் தேர்ச்சி பெற்ற 72 'நேர்மையான, விசுவாசமுள்ள, அக்கறையுள்ள' இந்தியப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். தேசப்பற்று மிக்க இந்தியர்களின் முதல் மகாசபை அது.

காங்கிரஸ் உறுப்பினர்களிடையே நட்புறவை ஏற்படுத்துதல்; தேசிய உணர்ச்சிகளை ஒருங்கிணைத்தல்; இந்தியாவின் முக்கியப் பிரச்னைகள் பற்றிய இந்தியத் தலைவர்களின் கருத்துக்களை சேகரித்தல்; காங்கிரசின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளைத் தீர்மானித்தல் ஆகியவை காங்கிரசின் குறிக்கோள்களாயிருந்தன.

#### வரலாற்றுச் சிறப்பு

காங்கிரசின் தோற்றம் இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் ஒரு முக்கிய மைல் கல்லாகும். வைசிராய் டஃபரின் பிரபுவின் ஆசீர்வாதத்துடன் ஹியூமால்

துவக்கப்பட்ட காங்கிரஸ் அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றதில் வியப்பில்லை. சர் ஹென்றி காட்டன், சர் வில்லியம் வெடர்பர்ன் போன்ற இந்திய அரசின் உயர்அதிகாரிகள் காங்கிரசின் முதல் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அதிகார வர்க்கத்தின் எதிர்ப்பையும் மீறி ஆங்கிலேய அரசாங்கம் காங்கிரசின் தோற்றத்தை அங்கீகரித்தது. இந்தியாவிலிருந்து அனைத்து அரசியல் அமைப்புகளின் பிரதிநிதிகளும் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டனர். வழக்கறிஞர்கள், வர்த்தகர்கள், வங்கியதிபர்கள், தொழிலதிபர்கள், மருத்துவர்கள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், பத்திரிகை அதிபர்கள், சட்டமன்ற உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அக்கூட்டத்தில் பங்கேற்றனர். இந்துக்கள், முஸ்லீம்கள், கிறித்துவர்கள், சீக்கியர்கள், பார்சீக்கள் என்ற வேறுபாடின்றி காங்கிரஸ் துவக்க விழாவில் கலந்து கொண்டனர். உண்மையிலேயே காங்கிரஸ் ஒரு தேச அமைப்பாகத் திகழ்ந்தது. காங்கிரசின் வருகையால் மக்களிடையே மிகுந்த உற்சாகம் ஏற்பட்டது. கதிரவனைக் கண்ட விண்மீன்கள் போன்று காங்கிரசின் தோற்றத்துக்குப் பின்னர் பிற அரசியல் சார்ந்த அமைப்புகளெல்லாம் செல்வாக்கிழந்தன, காங்கிரசோடு ஐக்கியமாயின.

## காங்கிரசின் வளர்ச்சி, 1885-1905

### காங்கிரஸ் கூட்டங்கள்

*1885* லிருந்து *1905* வரை காங்கிரஸ் ஆண்டுக் கூட்டங்கள் இந்தியாவின் முக்கிய நகரங்களில் நடைபெற்றன. பம்பாய் *(1885, 1889, 1904)*, கல்கத்தா *(1886, 1890, 1896, 1901)*, சென்னை *(1887, 1894, 1898,1903)*, அலகாபாத் *(1888,1892)*, நாக்பூர் *(1891)*, லாகூர் *(1893, 1900)*, பூனா *(1895)* அம்ரோதி *(1897)*, லக்னோ *(1899)* அகமதாபாத் *(1902)*, பனாரஸ் *(1905)* ஆகிய நகரங்களில் காங்கிரஸ் கூடிற்று. ஆண்டுதோறும் கிறித்துமஸ் விழாவையொட்டி மூன்று அல்லது நான்கு நாட்கள் கூட்டம் நடக்கும். இந்தியாவின் பொதுப் பிரச்னைகள் விவாதிக்கப்பட்டு, தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். அக்கூட்டங்கள் 'ஆண்டு தமாஷா', 'ஆண்டுக் கொண்டாட்டம்', 'மூன்று நாள் அதிசயம்' என்று விமர்சிக்கப்பட்டது. கற்றோர்கள் ஆண்டுதோறும் ஓரிடத்தில்கூடி தங்களிடமிருந்த விலையுயர்ந்த உடைகளை அணிந்து கொண்டு, விடுமுறை ஓய்வெடுத்து, ஊர் சுற்றிப் பார்த்து, நண்பர்களைக் கண்டுபேசி, விவாதங்கள் பலசெய்து, உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் பரிசுப் பொருள்களை வாங்கிக்கொண்டு தங்கள் ஊர்களுக்குத் திரும்பிச் சென்றனர் என்று லாலா லஜபதிராய் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டோரைப்பற்றி வர்ணித்தார். 1901 கல்கத்தா காங்கிரஸ் கூட்டத்தில் கலந்துகொண்ட காந்தி மூன்று நாட்கள் கூடிப்பின் தூங்கச் சென்றுவிடும் அமைப்பே காங்கிரஸ்' என்று கூறினார்.

### தேசிய அமைப்பு

காங்கிரஸ் உண்மையான தேசிய அமைப்பாகத் திகழ்ந்தது. சர் பெரோஸ்ஷா மேத்தா, தாதாபாய் நௌரோஜி போன்ற பாரசீகர்களும், பத்ருதீன் தியாப்ஜி போன்ற முஸ்லிம்களும், டபிள்யு சி. பானர்ஜி போன்ற கிறித்துவர்களும் காங்கிரசின் தூண்களாக இருந்தனர். பம்பாய் ராஜதானிக் கழகம், பூனா சர்வஜனிக் சபை, சென்னை மகாஜன சபை, இந்தியக் கழகம் போன்ற பிராந்திய அமைப்புகள் காங்கிரசோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன. சுரேந்திரநாத்

பானர்ஜியின் தலைமையில் செயல்பட்ட இந்தியக் கழகம் 1886ல் காங்கிரசோடு இணைந்தது. இந்தியாவின் செல்வாக்குமிக்க தலைவர்கள் காங்கிரசில் சேர்ந்தனர். காங்கிரஸ் தோன்றிய நாளிலிருந்து இந்திய தேசியத்தைத் தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

**காங்கிரஸ் தலைமை**

காங்கிரஸ் துவக்கப்பட்டபின் இருபதாண்டு காலத்துக்கு மேட்டுக்குடி மக்களால் ஆங்கிலக் கல்வி பெற்ற செல்வரும் செல்வாக்கு மிக்கவர்களால் தலைமையேற்று நடத்தப்பட்டது. அவர்களனைவரும் பிராந்திய அரசியல், பக்குவமும் அனுபவமும் பெற்றவர்கள். அவர்களில் மிகப் பெரும்பான்மையோர் நகரங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள்தான் காங்கிரஸ் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினர். முக்கியப் பதவிகளை வகித்தனர். இங்கிலாந்துக்குச் சென்ற தூதுக்குழுக்களில் இடம் பெற்றனர். காங்கிரசுக்கும் அரசாங்கத்துக்குமிடையே நடைபெற்ற சமரசப் பேச்சுக்களில் பங்கேற்றனர். மிதவாதிகளான காங்கிரஸ் தலைவர்கள் தங்களது ஆழ்ந்த அறிவாற்றலாலும், பழுத்த அனுபவத்தாலும், நடைமுறைத் திறமையாலும், சமூகச் செல்வாக்காலும் காங்கிரசை வழிநடத்திச் சென்றனர். எனினும் துவக்க கால காங்கிரசில் விவசாயிகள், கிராமக் கைவினைஞர்கள், தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்டோர் ஆகியோருக்குத் தலைமை பீடத்தில் இடமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**காங்கிரசின் கோரிக்கைகள்**

இருபதாண்டு கால *(1885-1905)* காங்கிரஸ் கூட்ட விவாதங்களையும், தீர்மானங்களையும் பரிசீலித்துப் பார்த்தால் பின்வரும் கோரிக்கைகளுக்கு காங்கிரஸ் முக்கியத்துவம் கொடுத்ததைக் காணலாம்:

1. வைசிராய், கவர்னர் ஆகியோரது ஆட்சிக்குழுக்களை விரிவுப்படுத்தி அவற்றில் இந்தியர்களுக்கு அதிக இடங்களைக் கொடுத்தல்;
2. இராணுவச் செலவைக் குறைத்தல்;
3. இந்திய விவகாரச் செயலர் பதவியை நீக்கல்;
4. இந்திய நிர்வாகத்தைப்பற்றி மதிப்பீடு செய்ய ஒரு 'ராயல்கமிஷனை' நியமித்தல்;
5. பொதுப்பணித் தேர்வுகளை இங்கிலாந்திலும், இந்தியாவிலும் ஒரே சமயத்தில் நடத்துதல்;
6. பொதுப் பணிகளில் இந்தியர்களுக்கு அதிக இடங்களை ஒதுக்குதல்;
7. சுயாட்சி நிறுவனங்களுக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுத்தல்;
8. ஆட்சித் துறையிலிருந்த நீதித்துறையைப் பிரித்தல்;
9. துணைக்கேள்விகளை எழுப்பவும், வரவுசெலவுத் திட்டத்தை விவாதிக்கவும் உரிமைபெற்ற பிரதிநிதித்துவச் சட்ட மன்றத்தை ஏற்படுத்துதல்;
10. மிதமான வரிகள்;
11. நட்புறவான போலீஸ்;
12. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இந்தியப் பிரதிநிதிகளுக்கு இடமளித்தல்;
13. இந்தியத் தொழிற்சாலைகளுக்கு ஊக்கமளித்தல்;
14. கல்வி மற்ற வேலைவாய்ப்புகளை அதிகரித்தல்;
15. நிலவரியைக் குறைத்தல்;

16. பத்திரிக்கைச் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்;
17. கிராம வங்கிகளை ஏற்படுத்தல்;
18. நிலச்சுவான்தார்களின் சுரண்டலிலிருந்து விவசாயிகளைப் பாதுகாத்தல்;
19. உப்பு வரியைக் குறைத்தல்;
20. பொதுவாக மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தல்.

### அரசாங்கத்தின்போக்கு

இந்திய தேசிய காங்கிரஸ் வைசிராய் டஃபரின் பிரபுவின் வாழ்த்துக்களோடுதான் துவக்கப்பட்டது. இரண்டாவது காங்கிரஸ் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதிநிதிகளை வைசிராய் அரசு இல்லத்தில் தோட்ட விருந்துக்கழைத்து சிறப்பித்தார் (1886). அதே போன்று சென்னை கவர்னர் கன்னிமாரா பிரபுவும் சென்னைக் காங்கிரசில் கலந்துகொண்ட பிரதிநிதிகளுக்கு வரவேற்பளித்தார் (1887). பிரபல ஆங்கிலேயர்கள் காங்கிரஸ் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினர். ஆனால் காங்கிரசின் செல்வாக்கு விரைந்து வளர்ந்தபோது அரசாங்கம் தனது போக்கை மாற்றிக்கொள்ளத் துவங்கியது. வைசிராய் டஃபரினே அதை 'அரசு துரோக அமைப்பு' என்று கண்டித்தார்! ஒரு சில கற்றவர்களின் கூட்டம் அது என்று காங்கிரசை உதாசீனப்படுத்தினார் அவர். வடமேற்கு மாநில லெப்டினன்ட் கவர்னராயிருந்த சர் ஆக்லண்டு கோல்வின் காங்கிரசை 'அபாயகரமான அமைப்பு' என்று நிந்தித்தார். இந்தியச் செயலராயிருந்த ஹாமில்டன் க்ாங்கிரஸ்காரர்களை 'அரசாங்கத்துக்கெதிரான இரட்டை இயல்பு கொண்டவர்கள்' என்று குற்றம் சாட்டினார். அதிகார வர்க்கத்தினர் காங்கிரஸ்காரர்களை 'வன்முறை வில்லன்கள்' என்று வர்ணித்தனர். கர்ஸன்பிரபு காங்கிரசைத் 'தள்ளாடிக் கொண்டிருக்கும் அசுத்தமான அமைப்பு' என்று சாடினார். அரசாங்கமும் அதிகார வர்க்கமும் இந்தியரைப் பிரிக்கச் சூழ்ச்சி செய்து, காங்கிரஸ் வளராமல் இருப்பதற்குப் பல தடைகளையும் ஏற்படுத்தின.

### காங்கிரசின் சாதனைகள்

இந்தியர்களை ஒன்று சேர்த்து மக்களுக்கு அரசியல் கல்வி அளித்து அவர்களின் தேசிய உணர்ச்சிகளைப் பிரதிபலித்த ஒரே தேசிய அமைப்பு காங்கிரஸ்தான். 1885லிருந்து 1905 வரை காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானங்களின் மூலம் இந்தியரது தேவைகளையும் விருப்பங்களையும் குறைபாடுகளையும் அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறியது. அரசாங்கத்தின் மக்கள் விரோத கொள்கைகளையும், நடவடிக்கைகளையும், சட்டங்களையும் கண்டிக்கவும் எதிர்க்கவும் தவறவில்லை. காங்கிரசின் சட்டமுறையான போராட்டத்தின் விளைவாகத்தான் 1892ல் இந்திய மன்றங்கள் சட்டம் இயற்றப்பட்டது. அரசாங்கப் பொதுப்பணிக்கான தேர்வுகள் ஒரே சமயத்தில் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது. இந்திய அரசியல் அமைப்பு முறையில் மாற்றங்கள் ஏற்படுவதற்குச் சாதகமாக இங்கிலாந்து மக்களின் ஆதரவைத் திரட்டும் பொருட்டு காங்கிரஸ் இங்கிலாந்துக்கு அனுப்பிய தூதுக்குழுக்கள் சிறந்த பணியாற்றின. காங்கிரசின் கோரிக்கையின் விளைவாக அரசாங்க நிர்வாகப் பணிகளில் இந்தியர்களுக்கு இடங்கள் அளிக்கப்பட்டன. காங்கிரஸ்

கற்றோரால் கட்டுப்படுத்தப்படுகிறது என்று குறை கூறப்பட்டபோது 'கற்றவர்கள் இன்று நினைப்பதை மற்றவர்கள் நாளை நினைப்பர்' என்று பதிலடி கொடுத்தார் கோகலே. அப்போதைய சூழ்நிலையில் காங்கிரசின் சாதனைகள் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியவையே. துவக்க கால காங்கிரஸ் சாதிக்காததற்கும், சாதிக்க முடியாததற்கும், சாதிக்க முயலாததற்கும் அதைக் குறை கூறுவதில் பயனில்லை.

**ஆலன் ஆக்டேவியன் ஹியூம், 1829-1912**

'காங்கிரசின் தந்தை' என்று அழைக்கப்படும் ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (Allen Octavian Hume) இந்தியாவில் பல்வேறு அரசாங்கப் பதவிகளை வகித்தவர். இவர் ஒன்பதாண்டு காலம் (1870-79) இந்திய அரசாங்கத்தின் வருவாய், விவசாயம் மற்றும் வர்த்தகத் துறைச் செயலராகப் பணியாற்றியபோது இந்தியரது நிலை பற்றியும் அவர்களது நினைப்பு குறித்தும் 30,000 இரகசிய அறிக்கைகள் அடங்கிய 7 தொகுப்புக் கோப்புகளைப் பார்க்கக்கூடிய வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டது. அதேபோன்று 1881ம் ஆண்டு மேடம் பிளவட்ஸ்கி மூலம் இந்தியரது மனநிலை பற்றிய தனது கணிப்பு சரியானதே என்பது உறுதியாயிற்று. இவற்றிலிருந்து ஹியூம் மக்களிடையே 'கொதித்துக் குமுறும் கோபம்' இருப்பதையும், அடித்தட்டு மக்கள் வன்முறைக் கிளர்ச்சி மூலம் பிரிட்டிஷ் ஆட்சியை அகற்றுவதற்குத் தயாராக உள்ளனர் என்ற முடிவுக்கு வந்தார். அத்தகைய சூழ்நிலை உருவாகாமல் இருப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

1882ம் ஆண்டு அரசாங்கப் பணியிலிருந்து விலகிக்கொண்ட ஹியூம் : 1.இந்தியர்கள் அரசியலில் பங்கேற்க வேண்டும் 2. இவர்கள் சமுதாயப் பிரச்னைகளால் பிளவுபடக் கூடாது என்று வெளிப்படையாகப் பேசினார். 'முதியவரின் நம்பிக்கை' என்ற நூலில் இந்தியரின் இன்னல்களையும், இடர்ப்பாடுகளையும் பிரிட்டிஷ் அரசாங்கம் புறக்கணிக்கக்கூடாது என்றும், 'பயமுறுத்திய பேரபாயம்' பற்றியும் எச்சரித்தார். 1883 மார்ச் முதல் தேதி கல்கத்தா பல்கலைக் கழகப் பட்டதாரிகளுக்கு எழுதிய கடிதத்தில் 'கடுகு விதைகளைப்போன்று ஐம்பது தன்னலம் கருதாத 'தியாக மனப்பான்மையுடைய இந்தியர்களைக்கொண்ட அமைப்பை' ஏற்படுத்த வேண்டியதன் இன்றியமையாமையை அடிக்கோடிட்டுக் காட்டினார். இந்தியத் தலைவர்களோடு தொடர்பு கொண்டார்.

ஹியூம் இங்கிலாந்து சென்று ரிப்பன் பிரபு, ஜான் பிரைட், டி.ரீட் போன்ற பிரபலங்களைச் சந்தித்துத் தன் முயற்சிக்கு ஆதரவு கோரினார். இந்தியாவில் நடக்கவிருந்த மாநாடு பற்றிய தகவல்களைப் பிரிட்டிஷ் பத்திரிகைகளில் பிரசுரிக்க ஏற்பாடுகளைச் செய்தார். இந்தியா திரும்பிய ஹியூம் இந்திய தேசிய காங்கிரசை அமைக்கும் பணியில் ஈடுபட்டார். ஹியூமின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய வில்லியம் வெடர்பர்ன் (William Wedderburn) அச்சுறுத்தும் அபாயத்தைத் தடுப்பதற்காகவே ஹியூம் காங்கிரசைத் தோற்றுவித்தார் என்று குறிப்பிட்டுள்ளார். அதேபோன்று 1898ல் 'இந்திய அரசியல்' என்ற பத்திரிகையில் டபுள்யு. சி. பானர்ஜி வெளியிட்ட அறிக்கையில் ஹியூம் 1884லேயே இந்தியாவின்

முன்னணித் தலைவர்களைக்கூட்டி இந்திய விவகாரங்கள்பற்றி விவாதிக்கத் திட்டமிட்டிருந்ததாகக் கூறியிருந்தார்.

ஹியூம் 1885 டிசம்பர் 28ம் நாள் பம்பாயில் துவக்கப்பட்ட அகில இந்திய காங்கிரசில் முதல் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றார். அவர் அப்பதவியில் 1907 வரை நீடித்தார். காங்கிரசின் கோட்பாடுபற்றி மக்களிடையே பிரச்சாரம் செய்ய ஹியூம் ஆண்டுதோறும் அவரது சொந்த செலவில் இந்தியாவின் பல பகுதிகளுக்கும் பயணம் செய்தார். 'ஹியூமுடன் தொடர்புகொண்ட செயலாற்றலற்ற மக்களைக்கூட செயலூக்கமுள்ள மக்களாக மாற்றக்கூடிய வசிய ஆற்றல் அவரிடமிருந்தது' என்று 'பெருங்கிளர்ச்சிக்குப்பின் இந்திய அரசியல்' நூலாசிரியர் சி.ஒய். சிந்தாமணி புகழாரம் சூட்டியுள்ளார்.

நாட்டுப்பற்றும் அறிவாற்றலும் ,அனுபவ விவேகமும் மிக்க இந்தியத் தலைவர்கள் பலர் இருக்க ஹியூம் காங்கிரசைத் தோற்றுவிக்க முனைப்பார்வம் காட்டியது ஏன்? ஹியூம் பிறப்பால் ஆங்கிலேயரேயன்றி, உள்ளத்தாலும் உணர்வாலும் மனிதாபிமானத்தாலும் ஜனநாயக நம்பிக்கையாலும், இந்தியரது முன்னேற்றத்தில் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தார். அதனால் அவர் அன்றைய தலைவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டார். ஹியூம் காங்கிரசைத் துவக்கினால் பிரிட்டிஷ் அரசாங்கம் சந்தேகக் கண்கொண்டு பார்க்காது, கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசீலிக்கும் என்று அவர்கள் நம்பினர், அவருடன் ஒத்துழைத்தனர். பிபன் சந்திரா கூறுவதைப்போன்று இந்தியத் தலைவர்கள் ஹியூமை இடிதாங்கியாகப் பயன்படுத்திக் கொண்டனர்!

# 10. காங்கிரஸ் மிதவாதிகள்

> துவக்கத்தில் காங்கிரசின் சாதனைகள் குறைவாகத்தான் இருக்கும்... தோல்விகள் ஏமாற்றம் அளிக்கக்கூடியவையாக இருக்கலாம். தோல்விகளிலிருந்துதான் பெரிய சாதனைகளை சாதிக்கக்கூடிய பலம் கிடைக்கும்.
>
> - கோபால கிருஷ்ண கோகலே.

இந்திய தேசிய காங்கிரசின் தோற்ற, வளர்ச்சியைப் பற்றி ஆராய்ச்சி செய்த வரலாற்று வல்லுனர்கள் துவக்க கால காங்கிரஸ்காரர்களை மிதவாதிகள் (Moderates) என்றும், தீவிரவாதிகள் (Extremists) என்றும் பாகுபடுத்திக் கூறியுள்ளனர். எ.வால்போர்ட் (A.Walport) எ.திரிபாதி (A.Tripathi), ஜி.ஜான்சன் (G.Johnson), டி.ஆர்க்கோவ் (D.Argov) போன்ற ஆராய்ச்சியாளர்கள் மிதவாத தீவிரவாத முரண்பாடுபற்றி ஆராய்ந்துள்ளனர். மிதவாதிகள், தீவிரவாதிகள் ஆகிய இரு சாராருமே நேர்மையான, நாணயமான, நாட்டுப்பற்று மிக்க காங்கிரஸ்காரர்கள்தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியைப்பற்றிய நோக்காலும், போக்காலும் துவக்க கால காங்கிரஸ்காரர்கள் மிதவாதிகளாகவும், தீவிரவாதிகளாகவும் அடையாளம் காட்டிக் கொண்டனர்.

### மிதவாதிகள் என்போர் யார்?

எப்போதிலிருந்து காங்கிரஸ்காரர்கள் மிதவாதிகளாகவும், தீவிரவாதிகளாகவும் பிரிந்தனர் என வரையறை செய்வது கடினம். காங்கிரஸ் தோன்றியதிலிருந்தே காங்கிரஸ்காரர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்திருக்க வேண்டும். பல்வேறு வகையினரை உள்ளடக்கிய காங்கிரஸ் கதம்பக் கூட்டமைப்பில் கருத்து முரண்பாடுகள் உருவானது இயல்பே. 1893 லேயே அரவிந்தர் காங்கிரஸ் செயல்படும் முறைபற்றிக் குறை கூறினார். திலகர் அதை எதிரொலித்தார். 1901ல் லாலா லஜபதிராய் காங்கிரஸ் கூட்டங்களைக் கிண்டல் செய்தார். எனினும் 1905 வங்கப் பிரிவினையின் போதுதான் தீவிரவாதிகள் யாரென்று தெளிவாகத் தெரிந்தது. எனவே 1885லிருந்து 1905 வரை காங்கிரசைக் கட்டுப்படுத்தி, நெறிப்படுத்தியவர்களை மிதவாதிகள் எனக் கூறலாம்.

மிதவாதிகள் அரசியல் சீர்திருத்தவாதிகள், அவர்கள் புரட்சிக்காரர்கள் அல்லர். அவர்கள் அனைவரும் ஆங்கிலம் கற்ற இந்திய தேசியவாதிகளின் விருப்பு, வெறுப்புகளை, எதிர்பார்ப்புகளை ஆங்கிலேய அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறியவர்கள்.

மிதவாதிகள் அனைவரும் தேசியவாதிகள். அவர்கள் சாதி, சமய, இன, சமூக, பிராந்திய வேறுபாடின்றிச் செயல்பட்டனர். இந்து, முஸ்லீம், கிறித்துவ,

தேசிய, பார்ஸி, ஆங்கிலோ-இந்தியப் பாகுபாடும் அவர்களுக்கில்லை. இந்தியர் அனைவருக்கும் அவர்கள் பாடுபட்டனர்.

மிதவாதிகள் பிரிட்டிஷ் விசுவாசிகள். அவர்களது விசுவாசத்துக்குக் காரணம் ஆங்கிலேயர்களால் தான் இந்தியாவுக்கு விடிவுகாலம் ஏற்பட்டது என்று அவர்கள் மனப்பூர்வமாக நம்பியதுதான். ஆங்கிலேய ஆட்சிதான் ஆங்கிலேயக் கல்வியைப் பரப்பியது; சட்ட, ஒழுங்கு, அமைதி, பாதுகாப்பை ஏற்படுத்தியது; மக்களுக்கு அரசியல் அடிப்படை உரிமைகளை வழங்கியது; யாவற்றுக்கும் மேலாக காங்கிரஸ் துவக்கப்படுவதை அனுமதித்து, ஆண்டுதோறும் இந்தியர் பிரச்னைகளைப்பற்றி விவாதிக்க வாய்ப்பளித்தது ஆங்கிலேய ஆட்சி.

மிதவாதிகள் யதார்த்தவாதிகள். அவர்கள் நடைமுறைச் சாத்தியமானவற்றைப் பற்றியே சிந்தித்தனர், செயல்பட்டனர். அவர்கள் கனவுலகக் கற்பனைவாதிகளல்லர். அவர்கள் ஒழுங்கான, கட்டுப்பாடான, சட்ட வரம்புக்குட்பட்ட வளர்ச்சியில் நம்பிக்கையுடையவர்கள். மிதவாதிகள் பிரிட்டிஷாரின் நீதி நியாய உணர்வு, நேர்மை, தாராள மனப்பான்மை ஆகிய பெருந்தன்மைகளைப் போற்றியவர்கள். செயற்கையான மாற்றத்தைவிட, இயற்கையான முன்னேற்றத்தைக் காண விழைந்தவர்கள். சுரேந்திரநாத் பானர்ஜி கூறியதைப்போன்று 'விடுதலையின் வெற்றி ஒரு நாளில் கிடைக்கக் கூடியதன்று'.

மிதவாதிகள் அரசாங்க விமர்சகர்கள். அவர்கள் அரசாங்க ஆதரவாளர்களாக இருந்த போதிலும் நியாயமற்ற அரசாங்க நடவடிக்கைகளைக் கடுமையாகக் கண்டித்தனர். அரசாங்க நிர்வாகம், அதிகார வர்க்கம், பொதுப்பணி, பொருளாதாரக் கொள்கை, நீதி நிர்வாகம், அத்துமீறிய அரசாங்கச் செயல்கள், சட்டமன்றச் சீர்திருத்தம் பற்றி அவர்கள் தங்கள் வழியில் அரசாங்கத்தை எதிர்த்தார்கள்.

மிதவாதிகள் சட்டரீதியான போராட்டக்காரர்கள். வேண்டுகோள்கள், விண்ணப்பங்கள், தீர்மானங்களோடு மட்டும் அவர்கள் திருப்தி அடையவில்லை. வன்முறை தவிர்த்துச் சட்டப்படி போராடினார்கள். உதாரணமாக, இறக்குமதிப் பொருள்களின்மீது காப்பு வரிகள் (Tariffs) விதிக்கப்பட்ட போதும், பருத்தியின்மீது ஆயத்தீர்வை சுமத்தப்பட்ட போதும் மிதவாதிகள் அகில இந்திய அளவில் போராட்டத்தை நடத்தினர்.

**மிதவாதிகளின் சாதனைகள்**

இந்திய தேசிய காங்கிரஸ் நாற்றங்கால் பருவத்தே இருந்தபோது மிதவாதிகள் தேசியப் பயிர் பட்டுப்போகாமல் பாதுகாத்தனர். மிதவாதம், இணைக்கப்படுதல், விட்டுக்கொடுப்பு, முறையான முன்னேற்றம், நியாயமான அதே சமயம் உறுதியான கோரிக்கை, சீரான சட்ட அமைப்புச் சீர்திருத்தம் ஆகிய பொறுக்கு விதைகளை விதைத்து தேசிய நாற்றுக்களைக் கருத்தோடு வளர்த்தனர். மக்களிடையே அரசியல் உரிமைகள், தாராளக் கொள்கை, மக்களாட்சி பற்றி அறியச் செய்து அரசியல் கல்வி கொடுத்தனர். மிதவாதிகள் யாசிக்கவில்லை, யோசித்துச் செயல்பட்டனர். "நாங்கள் பிச்சைக்காரர்களல்லர், எங்கள் கட்சி இரந்து உயிர்வாழும் கட்சியன்று; நாங்கள் மக்களின் தூதுவர்கள்" என்றார்

கோகலே. அரசியல் சீர்திருத்த முன்னோடிகளாக இருந்த மிதவாதிகளின் முயற்சியால் பல அரசியல் அமைப்பு மாற்றங்கள் ஏற்பட்டன. அவர்கள் போட்ட அடித்தளத்தின் மீதுதான் தன்னாட்சி, சுயராஜ்யம், இந்திய விடுதலை என்ற மாளிகை அடுக்கடுக்காகக் கட்டப்பட்டது. யாவற்றுக்கும் மேலாக ஆங்கில ஆட்சியின் உண்மைத் தன்மையை அம்பலப்படுத்தி, அதிகாரிகளின் ஆணவப் போக்கையும் அரசாங்கத்தின் சுரண்டல் கொள்கையைப் பற்றியும் மக்கள் நன்கு அறிந்து கொள்வதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தவர்கள் மிதவாதிகள். இந்திய நிர்வாகம் பற்றிய பாராளுமன்ற விசாரணை, 1892 இந்திய மன்றங்கள் சட்டம், அரசாங்க அதிகாரிகள் காங்கிரஸ் கூட்டங்களில் பார்வையாளர்களாகக்கூட கலந்து கொள்ளக் கூடாது என்று வங்காள அரசாங்க ஆணை ரத்து செய்யப்பட்டது (1890), வழக்கறிஞர்களின் சுதந்திரத்தைப் பாதிக்கும்வகையில் அரசாங்கம் மேற்கொண்ட முயற்சியை முறியடித்தது (1890) ஆகியவை மிதவாதிகளின் நேரடிச் சாதனைகளாகும்.

**மிதவாதிகளின் குறைபாடுகள்**

மிதவாதிகள் காங்கிரஸ் தீவிரவாதிகளின் கடுமையான கண்டனத்துக்காளானார்கள். மிதவாதிகள் ஆங்கிலக் கல்வி பெற்ற அரசியல் புறாக்களாக இருந்ததால் அவர்களால் எவ்வித நேரடி நடவடிக்கையிலும் ஈடுபட முடியவில்லை. மிதவாதிகள் அரசாங்கத்திடமிருந்து ஒப்புதல்களையும், சலுகைகளையும் எதிர்பார்த்தனரேயன்றி அரசியல் தன்னாட்சியையும், உரிமைகளையும் கோரிப் பெறவில்லை. அவர்கள் பிரார்த்தனைகள், விண்ணப்பங்கள், சத்தற்ற எதிர்ப்புகளை காட்டினார்களேயொழிய அரசியல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவில்லை. பிபின் சந்திரபால் குறிப்பிட்டது போன்று மிதவாதிகள் யாசகத்துக்குப் போராட்டம் என்று பெயர் சூட்டினர். இருபதாண்டுகால முயற்சியால் மிதவாதிகள் ஆங்கிலேய அரசிடமிருந்து ரொட்டிக்கு பதில் கல்லையே பெற்றனர் என்றார் 'லாலா லஜபதி ராய். மிதவாதிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் விசுவாசமாக இருந்துகொண்டு மக்கள் உரிமைகளுக்காகவும் போராடினர். கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்ற நிலை அது. ஆங்கிலேயரது குறிக்கோள்களும் இந்தியர்களது இலட்சியங்களும் எதிர்மறையானவை என்பதை மிதவாதிகள் புரிந்து கொள்ளவில்லை. பிரிட்டிஷாரைத் திருப்திப்படுத்தும் மிதவாதிகளின் முயற்சியில் தேசிய இயக்கத்துக்குத் தேவையான அடிப்படைக் கூறுகள் இல்லை. வங்காளப் பிரிவினை (1905) மிதவாதிகள் ஆங்கிலேயரின் நீதி நியாய உணர்வின்மீது வைத்திருந்த நம்பிக்கையில் பேரிடியாக விழுந்தது. ஆங்கிலேயக் காலனி ஆதிக்கத்தின் உண்மைத்தன்மையை மிதவாதிகள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அதனால்தான் அவர்கள் மலையளவு சீர்திருத்தத்தை எதிர்பார்த்து எலி அளவு சாதித்தார்கள்.

**மிதவாதிகளின் சட்டமன்றப் பணி**

**மிதவாதிகளின் முயற்சி**

காங்கிரஸ் மிதவாதிகளின் சட்டமன்றப் பணி சிறப்பானது. போற்றுதற்குரியது. காங்கிரஸ் தோற்றுவிக்கப்படுவதற்கு முன்பே இந்தியச்

கவுன்சில் சட்டம் 1861ன்கீழ் உருவாக்கப்பட்ட இம்பீரியல் சட்டமன்றத்தில் சயத் அகமதுகான் (1878-82) கிறிஸ்டோதாஸ் (1883), வி.என்.மான்டிக் (1884-87), கே.எல்.நூல்கர் (1890-91), ராஷ் பிகாரிகோஷ் (1892) போன்றோர் அரசாங்கத்துடன் ஒத்துப்போனாலும் கம்பெனி நிர்வாகம்பற்றி இந்தியரின் எண்ணங்களையும் எதிர்ப்பார்புகளையும் எடுத்துரைக்கத் தவறியதில்லை.

காங்கிரஸ் துவங்கப்பட்ட பிறகு கொண்டுவரப்பட்ட இந்தியக் கவுன்சில் சட்டம் 1892 மத்திய, மாநில சட்டமன்றங்களின் நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்தியது. இவர்களில் சிலர் முனிசிபல் கமிட்டிகள், மாவட்ட மன்றங்கள், போன்ற அமைப்புகளால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1909 வரை செயல்பட்ட இம்மன்றம் 'சீர்திருத்தப்பட்ட மன்றம்' என்று அழைக்கப்பட்டது. இம்மன்றத்துக்கு வங்காளம், ஐக்கிய மாகாணம், பம்பாய், மதராஸ், மத்திய மாகாணம் ஆகிய மாகாணங்களிலிருந்து பிரதிநிதிகள் அனுப்பப்பட்டனர். சென்னையிலிருந்து பி.அனந்தாசார்லு, சி.சங்கரன் நாயர், விஜயராகவாச்சாரியார் ஆகியோர் சென்றனர். இப்பிரதிநிதிகள் 1893 லிருந்து 1909 வரை மத்திய மாநில சட்ட மன்றங்களில் சிறப்பாகச் செயல்பட்டனர். இவர்களுள் பெரோஸ்ஷா மேத்தாவும், கோகலேயும் குறிப்பிடத்தக்க காங்கிரஸ் மிதவாதப் பிரதிநிதிகள் ஆவர்.

**பெரோஸ்ஷா மேத்தா**

பெரோஸ்ஷா மேத்தா காங்கிரஸ் மிதவாத மேதை, தாதாபாய் நௌரோஜியின் சீடர். இலண்டனில் சட்டம் பயின்றவர். பம்பாய் பிரெசிடென்சி ஆசோசியேஷன் நிறுவனர்களில் ஒருவர். இவர் அகில இந்திய காங்கிரஸ் தோற்ற கர்த்தாக்களில் ஒருவர் என்பது நினைவுகூறத்தக்கது. மேத்தா கேட்போர் பிணிக்கும் பேச்சாளர். இவருடைய பேச்சுகளில் துணிவு, தெளிவு, எளிமை, கூர்மை, நகைச்சுவை, உடனெதிர் மொழிதல், இலக்கியத்திறன் இழையோடிருக்கும். 1895 ஜனவரி மாதம் கொண்டுவரப்பட்ட போலீஸ் சட்டத்தைக் கடுமையாக விமர்சித்தார். ஜேம்ஸ் வெஸ்ட்லாண்ட் என்ற நீதி உறுப்பினர் மேத்தா சட்ட மன்றத்தில் 'புதிய உணர்வைக் கொண்டு வருகிறார், அரசுக்கு விரோதமாகப் பேசுகிறார், சட்டமன்றத்தின் நடைமுறையை அடியோடுமாற்ற முனைகிறார், மன்றத்தை மாசு படுத்துகிறார்' என்று குற்றம் சாட்டினார்!

மேத்தா அரசாங்கத்தின் கல்விக்கொள்கை, விவசாயிகளின் வறுமை, நிலஉரிமை, கடன்சுமை, தீர்வை வரி பற்றிக் குத்தலாகவும், கிண்டலாகவும், கேலியாகவும் அதேசமயம் கடுமையாகவும் பேசினார். இவரது சட்டமன்ற உரைகள் அதிகாரிகளைச் சீற்றமடையச் செய்தாலும், அரசாங்கத்தை சிந்திக்க வைத்தது.

**கோபால கிருஷ்ண கோகலே**

கோகலே மேத்தாவைப்போன்று நாவன்மை படைத்த பேச்சாளரல்லர். ஆனால் அவரது அறிவாற்றல், பிரச்னைகள் பற்றிய தகவல்களைத் திரட்டிக் கையாண்ட உத்தி, மென்மையாக அதேசமயம் உறுதியாக விவாதித்தவிதம், கூர்மையான குற்றச்சாட்டுகள், விடாப்பிடி உறுதி, கடமை தவறிய அரசாங்கத் தவறுகளை சுட்டிக்காட்டல் போன்றவை கோகலேயை சிறந்த சட்டமன்றப்

பங்களிப்பவாக்கியது. கோகலேயின் அரசாங்க வரவுசெலவு பற்றிய பேச்சுக்கள் சட்டமன்ற விவாதப் பேச்சுக்கு இலக்கணமாகும். குறிப்பாக, 1902 மார்ச் 26ம் தேதி இவர் நிகழ்த்திய வரவுசெலவுப் பேருரை இவரை எதிர்ப்போராலும் பாராட்டப்பட்டது. 'பிரதிநிதித்துவமின்றேல் வரி விதிப்பில்லை' என்ற இவரது குரல் நாடெங்கும் எதிரொலித்தது. கோகலேயின் சட்டமன்ற உரைகளைப் பத்திரிகைகள் பிரதானமாகப் பிரசுரித்தன.

கோகலேயின் பத்தாண்டு கால சட்டமன்றப் பேச்சுகள் நாட்டின் நிதிநிலை, இந்தியத் தொழில்வளர்ச்சியில் அரசாங்கத்தின் அக்கறையின்மை, விவசாயிகள் மற்றும் ஏழை எளியோரின் வறுமை, வரிச்சுமை, கல்வி, சுகாதாரம், மருத்துவ வசதி போன்ற மக்கள் நலத்திட்டங்களின் முக்கியத்துவம், பத்திரிகை சுதந்திரம், இந்தியப் பொருளாதாரப் பின்னடைவு, வேலைவாய்ப்புகளை அதிகரித்தல் போன்ற மக்கள் பிரச்னைகளை மையப்படுத்தியதாக இருந்தன. கோகலே சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிக்கு தலைவராகச் செயல்பட்டார் என்றால் மிகையாகாது. இவரது சட்டமன்றச் சாதனைகள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. பத்திரிகைகள் பாராட்டின. மக்கள் போற்றினர். காங்கிரஸ் மிதவாதத் தலைவரான கோகலே இறந்தவுடன், தீவிரவாதத் தலைவரான திலகர் கூறினார் "இந்தியாவின் வைரம், மகாராஷ்டிரத்தின் அணிகலன், உழைப்பாளிகளின் இளவரசர் கோகலேயைப் பின்பற்ற முயற்சி செய்யுங்கள்".

**விடுதலைப் போராட்டத்தில் கோகலேயின் பங்கு**

ஆலன் ஆக்டேவியன் ஹியூம், உமேஷ் சந்திர பானர்ஜி, சுரேந்திர நாத் பானர்ஜி, தாதாபாய் நௌரோஜி, பெரோஸ்ஷா மேத்தா, மகாதேவ கோவிந்த ரானடே, கோபால கிருஷ்ண கோகலே, ராஸ் பிஹாரி கோஸ், மதன் மோகன் மாளவியா போன்றோர் புகழ்மிக்க மிதவாதத் தலைவர்களாகத் திகழ்ந்தார்கள். அவர்களுள் கோகலே ஒப்பற்ற தலைவராக விளங்கினார். 1866 மே 9ஆம் நாள் மகாராஷ்டிரத்தில் உள்ள கோல்ஹாப்பூரில் ஒரு ஏழை சித்பவன் பிராமண குடும்பத்தில் பிறந்தார் கோகலே. பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் மேல்படிப்பு பெற்றார். பூனா பெர்கூஸன் கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரியராகப் பணியாற்றி, அக்கல்லூரியின் முதல்வராகப் பதவி உயர்வு பெற்று 1902ல் பதவி ஓய்வு பெற்றார். 1905ல் இந்திய இளைஞர்களை தேசசேவைக்காகப் பயிற்சியளிக்கும் பொருட்டு "இந்திய ஊழியர்கள் சங்கத்தை" (Servants of India Society )த் துவக்கினார். அந்த ஆண்டே பனாரசில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். 1907ல் சூரத்தில் ஏற்பட்ட காங்கிரஸ் பிளவு குறித்து மனம் வருந்தினார். இந்திய சட்டமன்ற உறுப்பினராகவும், இந்தியப் பொதுப்பணி பற்றி ஆராய்ந்து இஸ்லிங்டன் கமிஷன் (Islington Commission) உறுப்பினராகவும் பணியாற்றினார். காந்தியின் அழைப்பின் பேரில் 1912ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்கா சென்று அங்குள்ள இந்தியரது பிரச்னை தீர பாடுபட்டார். 1915 பிப்ரவரி 19ஆம் நாள் தனது நாற்பத்தொன்பதாம் வயதில் உயிர் நீத்தார்.

கோகலே தனது பத்தொன்பதாம் வயதிலிருந்தே பொதுமக்கள் சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். ரானடே, அகர்கார் ஆகியோருடன் சமூக சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். கோகலே அரசியலில்

மிதவாதியேயொழிய சமூக சீர்திருத்தத்தில் தீவிரவாதி. பெனாரஸ் காங்கிரஸ் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய கோகலே வங்கப் பிரிவினையைக் கண்டித்து, கர்ஸன் பிரபுவை முகலாய மன்னர் அவுரங்கசீப்போடு ஒப்பிட்டுப் பேசினார். வங்காளிகளின் தீரத்தைப் பாராட்டினார். அவர்கள் துவக்கிய சுதேசி இயக்கத்தை போற்றினார். அதன்பின் மிதவாதிகளோடு முரண்பட்டு நின்று தீவிரவாதிகளோடு சமரச முயற்சியில் ஈடுபட்டார். அவரது இணைப்பு முயற்சி தோல்வியுற்றதால் காங்கிரஸ் பிளவுபட்டது (1907). சூரத் காங்கிரஸ் பிளவால் மனந்தளராத கோகலே தன் காரியத்திலேயே கண்ணாயிருந்தார்.

கோகலே ஒரு சிறந்த சட்டமன்ற உறுப்பினர். தனது 22வது வயதில் பம்பாய் சட்டமன்றத்துக்கும், 36வது வயதில் இந்திய சட்டமன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். மத்தியச் சட்ட மன்றத்தில் அவரது வரவு செலவு திட்டத்தைப் பற்றிய பேச்சுக்கள் பிரசித்தமானவை. 1911ல் கட்டாய துவக்கக் கல்விபற்றிய மசோதாவைக் கொண்டு வந்தார். மனிதாபிமானமற்ற செயல்களுக்காக வைசிராய் கர்சன் பிரபுவைக் கடுமையாக விமரிசனம் செய்தார். அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளைக் கண்டித்தார்.

கோகலே பலமுறை இங்கிலாந்து சென்றார். தனது குணநலன்களாலும் ஆழ்ந்த அறிவாலும், நயமான அணுகுமுறையாலும் அங்கிருந்த அரசியல் தலைவர்களைக் கவர்ந்தார். கோகலே இந்திய விவகார காரியதரிசி ஜான்மார்லியுடன் நடத்திய விவாதத்தின் விளைவாக இந்தியாவில் மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. ஆனால் அச்சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட விதத்தின்மீது மிகுந்த மனவருத்தமடைந்தார்.

அப்பழுக்கற்ற தேசிய வாதியான கோகலே காங்கிரசின் ஒற்றுமையை நிலைநாட்ட அரும்பாடுபட்டார். பிரிந்துநின்ற மிதவாதிகளையும் தீவிரவாதிகளையும் ஒன்றுசேர்க்கப் பெரிதும் விரும்பினார் கோகலே. சென்னை மிதவாதத் தலைவர்களான அன்னிபெசண்ட் அம்மையாரும், ஜி.சுப்பிரமணிய அய்யரும், சி.பி.ராமசாமி அய்யரும், சுப்பராவும் இது சம்பந்தமாக கோகலேக்கு உதவிசெய்ய முன் வந்தனர். அவர்களின் துணையோடு 1914ஆம் ஆண்டு மாண்டலே சிறையிலிருந்து விடுதலையாகி வந்த திலகரோடு இருமுறை முயற்சி செய்தார் கோகலே. ஆனால் பெரோஸ்ஷா மேத்தா போட்ட முட்டுக்கட்டையால் கோகலேயின் ஆசை நிராசையாயிற்று. ஆயினும் கோகலே விதைத்த மிதவாத தீவிரவாத காங்கிரசார் இணைப்பு விதைகள் 1916ஆம் ஆண்டு பலன்தந்தது. பிளவுபட்டிருந்த காங்கிரஸ் ஒன்றுபட்டது. ஆனால் அந்த அரிய காட்சியைக் காண கோகலே உயிருடன் இல்லை!

## தாதாபாய் நௌரோஜி, 1825-1917

### மராத்திய மைந்தர்

மராத்திய மைந்தரான தாதாபாய் நௌரோஜி 1825 செப்டம்பர் 4ம் நாள் பிறந்தார். அறிவாற்றல்மிக்க அவர் பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் கணிதப் பேராசிரியராக பணியாற்றிக் கொண்டே சமுதாயப் பணியிலும் ஈடுபட்டார். பின்னர் அவர் பரோடாவின் திவானாகவும் (1874), பம்பாய் சட்டமன்ற நியமன உறுப்பினராகவும் (1885) பணியாற்றினார். நௌரோஜி கோமா கம்பெனி

(Coma & Company )யின் பிரதிநிதியாக இங்கிலாந்து சென்று நிரந்தரமாகத் தங்கிவிட்டார்.

**இங்கிலாந்தில் இந்தியப் பணி**

நாட்டுப் பற்றுமிக்க நௌரோஜியின் உடல் இங்கிலாந்தில் இருந்தாலும் அவரது உள்ளம் இந்தியாவில் இருந்தது. இவர் கிழக்கு இந்தியக் கழகம் (East India Association) மற்றும் இலண்டன் இந்தியர் சங்கம் (London Indian Society) என்ற இரண்டு அமைப்புகளை ஏற்படுத்தி ஆங்கிலேயரிடையே இந்தியர்களின் கோரிக்கைகள் பற்றிப் பிரச்சாரம் செய்தார். 'இந்தியாவின் குரல்' (Voice of India) என்ற பத்திரிகை நடத்தி பத்திரிகை சுதந்திரத்துக்காகப் போராடினார். திலகர் கைது செய்யப்பட்டபோது (1879 ஜூலை 27) பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அடக்குமுறை தற்கொலைக்குச் சமமானது என்று எச்சரித்தார். இங்கிலாந்து நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று மக்களவை உறுப்பினராகி இந்திய தேசியத்தின் குரலாகச் செயல்பட்டார் (1892). இவர் இங்கிலாந்தில் இருந்தாலும் இந்தியாவுடன் இடையறாது தொடர்பு கொண்டிருந்தார்.

**காங்கிரஸ் தலைவர்**

தாதாபாய் நௌரோஜி மூன்றுமுறை காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (1886, 1893, 1906) என்பது குறிப்பிடத்தக்கது. 1906ம் ஆண்டு கல்கத்தா காங்கிரஸ் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி ஆற்றிய உரையில்: 1. இந்தியர்களின் எதிர்காலம் இந்தியர்களின் கையில்தான் உள்ளது;2. நீதிநாட்டமும், நியாய உணர்வும் கொண்ட ஆங்கிலேயர் மக்கள் குரலுக்குச் செவிசாய்ப்பர்; 3. மக்கள் தலைவர்கள் சலுகைகளைக் கேட்பதற்கு பதில் நீதி கோர வேண்டும்; 4. ஆங்கிலேயர் அனுபவிக்கும் உரிமைகள் இந்தியர்களுக்கும் வழங்கப்படுதல் வேண்டும் 5. சுயராஜ்யமே இந்தியரின் இதய நாதமாகும் என்று முழக்கமிட்டார்.

நௌரோஜி காங்கிரஸ் மிதவாதிகள் மற்றும் தீவிவாதிகளின் ஒருமித்த ஆதரவைப் பெற்றிருந்தார். இவர் காங்கிரசின் நோக்கிலும் போக்கிலும் புதிய திருப்பத்தை ஏற்படுத்தினார். மக்கள் இறைமை (Sovereignty of the People) பற்றிய விழிப்புணர்வை எழுப்பினார். அரசியல் ஜனநாயகத்தின் ஆணிவேராகக் கருதப்படும் 'மக்களுக்காக ஆட்சியாளர்களேயன்றி ஆட்சியாளர்களுக்காக மக்களில்லை' என்ற கருத்தை வலியுறுத்தினார். வெற்றிகரமான வர்த்தகரான நௌரோஜி ஈட்டிய பொருளையெல்லாம் இந்திய தேசிய இயக்கத்துக்காகவே செலவிட்டார்!

**வடிகால் கொள்கை வகுத்தவர்**

நௌரோஜி. இந்தியாவின் வறுமைபற்றி அறிவுபூர்வமாக ஆராய்ச்சி செய்தார். வறுமையின் வேர்களைக் கண்டறிந்தார். ஆதாரங்களின் அடிப்படையில் 1867ம் ஆண்டு தனது 'வடிகால்கொள்கை (Drain Theory )யை வெளியிட்டார். பின்னர் அதுவே அவர் எழுதிய 'வறுமையும் பிரிட்டனுக்கொவ்வாத இந்திய ஆட்சியும் (Poverty and Un-British Rule in India. London. 1901) என்ற நூலின் கருப்பொருளாயிற்று.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்தியாவை வடிகாலாகப் பயன்படுத்தி இந்தியாவின் செல்வத்தை இங்கிலாந்துக்குக் கொண்டு சென்றதால்தான் மக்கள் வறுமையின் பிடியில் சிக்கினர் என்பதே 'வடிகால் கொள்கையின் சாரமாகும். இக்கொள்கையைத் தக்க ஆதாரங்களோடும் புள்ளிவிவரங்களோடும் விளக்கினார். பிரிட்டிஷ் பொருளாதாரக் கொள்கையின் வக்கரிப்பையும், பொருளாதார நியதிகளின் நெறிபிறழ்ந்த முறைகேடுகளையும் அம்பலப்படுத்தினார்.

வடிகால்கொள்கைப்படி இந்தியா இரண்டு வழிகளில் சுரண்டப்பட்டது. 1. இந்திய அரசாங்க மற்றும் நிர்வாகச் செலவு. அதோடு ஆங்கில ஆட்சியாளர்களும், அதிகாரிகளும், அலுவலர்களும் சம்பளமாகவும் ஓய்வூதியமாகவும் சேமிப்பாகவும் செலவுக்காகவும் இங்கிலாந்துக்கு அனுப்பிய பணம். அதேபோன்று இங்கிலாந்திலிருந்து இந்தியாவை ஆட்சி செய்ததற்கான செலவு 2. அதிகாரபூர்வமற்ற ஆங்கில வர்த்தகர்கள், தொழிலதிபர்கள், வியாபாரிகள், தோட்ட முதலாளிகள் சம்பாதித்து அனுப்பிய பணம்.

இவ்வாறு பல வழிகளிலும் இந்தியச் செல்வம் இங்கிலாந்துக்குக் கொண்டு செல்லப்பட்டதால் இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு முதலீடு செய்வதற்குத் தேவையான மூலதனம் இல்லாமல் போயிற்று. இந்தியாவிலிருந்து கொண்டு சென்ற பணத்தை, மூலதனமாக மீண்டும் இந்தியாவுக்கே கொண்டுவந்து, ஏகபோக வர்த்தகம் செய்து கொள்ளை இலாபம்பெற்று அதையும் தாய்நாட்டுக்கே கொண்டு சென்றனர். இவ்விருவழிச்சுரண்டல் இந்தியப் பொருளாதாரத்தைப் பெரிதும் பலவீனப்படுத்தி வறுமைக்கு வழி வகுத்துவிட்டது.

**அறிவு இழப்பு**

பொருளாதாரச் சுரண்டலோடு அறிவு இழப்பும் ஏற்பட்டதாகக் கூறினார் நௌரோஜி. ஆங்கிலேயர்களே உயர் பதவிகளை வகித்தனர். இவர்களோடு இந்தியாவில் பணியாற்றிய விஞ்ஞானிகள், பொறியாளர்கள், மருத்துவர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள் போன்றோர் பணிஓய்வு பெற்றபின் இங்கிலாந்துக்கே திரும்பிவிட்டதால் அவர்களது அறிவும், ஆற்றலும், அனுபவமும் இந்திய முன்னேற்றத்துக்குப் பயன்படாமல் போய்விட்டது.

**விடுதலைக்கான வழி**

நௌரோஜி இந்தியா வறுமைப் பிடியிலிருந்து விடுபடுவதற்கான வழிகளையும் காட்டினார்; 1. 1858ல் விக்டோரியா மகாராணி வெளியிட்ட பிரகடனத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்; 2. 1833ம் ஆண்டு சட்டச் சரத்துக்களை நடைமுறைப்படுத்த வேண்டும்; 3. உயர்பதவிகளில் இந்தியர்களுக்கு இடமளிக்க வேண்டும்; 4. நிர்வாகத்தில் இந்தியரின் பங்கேற்பும், கட்டுப்பாடும் அதிகரிக்க வேண்டியது அவசியம்; 5. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சட்ட மன்றங்கள் அமைக்கப்பட வேண்டும், 6. இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமிடையேயான நிதித் தொடர்புகள் நியாயமானதாக இருத்தல் வேண்டும். அதாவது முடிவைப் போன்றே மார்க்கமும் உண்மையாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

**மதிப்பீடு**

தாதாபாய் நௌரோஜி அகில இந்திய காங்கிரஸ் துவக்கப்பட்டபோது பிரபலமாக இருந்த இந்தியர்களுள் ஒருவர் ஆவார். 'ஈதல் இசைபட வாழ்தல்' என்ற வாக்குக்கேற்ப வாழ்ந்தவர். இவர் நாட்டு பற்று மிக்க சமயச்சார்பற்ற தேசியவாதி. இந்தியாவைப் பற்றியே சிந்தித்துச் செயல்பட்டவர். இந்திய விடுதலைக்காக இங்கிலாந்தில் இருந்துகொண்டு ஆங்கிலேயரின் மனதைப் பக்குவப்படுத்துவதில் முனைப்புடன் பணியாற்றினார். இந்திய தேசியத்தின் பொருளாதார அடிப்படையை அமைத்துக் கொடுத்தவர். பிற தலைவர்கள் அரசியலை மையமாகக்கொண்டு செயல்பட்டபோது நௌரோஜி இந்திய தேசிய எழுச்சிக்கான பொருளாதாரப் பரிமாணத்தைக் காட்டினார். இந்தியாவின் செல்வம் கண்ணுக்குத் தெரியாமல் அமைதியாக, நுட்பநுணுக்கத்தோடு இந்தியாவைவிட்டு, கொண்டு செல்லப்பட்டதன் விளைவாக மக்கள் வறுமையில் பிறந்து, வறுமையில் வசித்து, வறுமையில் இறந்தனர் என்று எடுத்துக்காட்டி காலனி ஆட்சியின் இயல்பை வெளிப்படுத்தினார். இவர் காங்கிரசுக்கு மூன்று முறை தலைமைப் பொறுப்பேற்று இந்திய சுயராஜ்யத்துக்காக உரக்கக் குரல் கொடுத்தார். நௌரோஜி 'இந்தியாவின் பெருமைக்குரிய பெரியவர்' (Grand Old Man of India ) என்று போற்றப்பட்டது பொருத்தமேயாகும்.

**உமேஷ் சந்திர பானர்ஜி**

**காங்கிரசின் முதல் தலைவர்**

உமேஷ் சந்திர பானர்ஜி 1885 டிசம்பர் 28ம் நாள் பம்பாயில் கூடிய முதல் அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். இவர் இக்கூட்டத்தில் காங்கிரசின் குறிக்கோள்களைப் பின்வருமாறு வரையறுத்தார்: 1. நாட்டு நலனில் அக்கறை கொண்ட அனைவரிடையேயும் நெருங்கிய நட்புணர்வையும், தொடர்பையும் ஏற்படுத்தல்; 2. நாட்டை நேசிப்போரிடையே இன, மத, பிராந்தியப் பற்றுகளையும் பிடிப்புகளையும் போக்கி, தேச ஒற்றுமை உணர்வை முழுமையாக வளர்த்து வலுப்படுத்தல்; 3. நாட்டின் முக்கிய சமுதாயப் பிரச்னைகள் பற்றிய கற்றோர் வகுப்பாரின் முதிர்ந்த கருத்துக்களை முறையாகப் பதிவு செய்தல். சுருங்கக்கூறின் மக்களிடையே தேச உணர்வையும், ஒற்றுமையையும் உருவாக்குவதே காங்கிரசின் தலையாய பணி என்பதை அடிக்கோடிட்டுக் காட்டினார் பானர்ஜி.

**பாதுகாப்பு - ஊடிதழ் கோட்பாடு**

மக்களின் மனக்குமுறலுக்குப் பாதுகாப்பான, அமைதியான, சட்டபூர்வமான வடிகாலை அமைத்துக் கொடுத்தல் 'பாதுகாப்பு - ஊடிதழ் கோட்பாட்டின் (Safety-Valve Theory) மூலக் கருத்தாகும். உமேஷ் சந்திர பானர்ஜி 1898ல் 'இந்திய அரசியல்' என்ற நூலுக்கு எழுதிய முன்னுரையில் இக்கோட்பாட்டுக்கு வரிவடிவம் கொடுத்தார். அதில் காங்கிரஸ் துவக்கப்பட்டதற்கு டஃப்ரினும், ஆலனும் காரணம் என்றும், 1884லேயே டஃப்ரின் இந்திய அரசியல் தலைவர்களை ஆண்டுக்கொருமுறை கூட்டி 'சமுதாய விவகாரங்களை' விவாதித்து மக்கள் உணர்ச்சிகளுக்கு வடிகால் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும் கூறியதாகக் குறிப்பிட்டிருந்தார். இக்கருத்து காங்கிரசின் துவக்க காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும், இன்றைய ஆராய்ச்சி ஆதாரங்கள் பாதுகாப்பு - ஊடிதழ்க் கோட்பாட்டுக்கு ஆதரவாக இல்லை.

# 12. காங்கிரஸ் தீவிரவாதிகள்

> அரசியல் உரிமைகளைப் போராடித்தான் பெற வேண்டும்.
>
> - பாலகங்காதர திலகர்.

*1905* லிருந்து *1919* வரையான காலக்கட்டத்தைத் 'தீவிரவாதிகளின் சகாப்தம்' (Era of the Extremists) என அழைக்கலாம். மிதவாதிகளைப் போன்றே தீவிரவாதிகளும் நாட்டுப்பற்று மிக்க காங்கிரஸ்காரர்கள்தான். காங்கிரஸ் மிதவாதிகளின் ஆதிக்கத்தின்கீழ் இருந்தவரை *(1885-1905)* தீவிரவாதிகளால் தலைதூக்க முடியவில்லை. வங்கப் பிரிவினையின்போது *(1905)* தீவிரவாதிகள் சுதேசி இயக்கத்தின் மூலம் தங்களைத் தெளிவாக அடையாளங் காட்டிக் கொண்டனர். அரசியல் குறிக்கோள்; அக்குறிக்கோளை அடைவதற்கான வழிமுறைகள்; மக்களின் ஆதரவோடுகூடிய இயக்கம் ஆகிய மூன்று விஷயங்களிலும் மிதவாதிகளும் தீவிரவாதிகளும் முரண்பட்டு நின்றனர்.

**தீவிர தேசியத்தின் தோற்றம்**

**அரவிந்த கோஷ் (1872-1950)**

இவர் இங்கிலாந்திலிருந்து இந்தியா திரும்பியவுடன் *(1893)* இந்திய தேசிய அரசியலில் தீவிரவாத விதைகளை விதைத்தார். பம்பாயிலிருந்து வெளியான ஒரு பத்திரிகையில் முதியோருக்கு புதிய விளக்குகள் (New Lamps for old) என்ற தலைப்பில் கட்டுரைகள் எழுதினார். அவற்றில் காங்கிரசையும் காங்கிரஸ் தலைமையையும் குறை கூறினார். காங்கிரசை 'ஒரு மத்திய தர வகுப்பாரின் கருவி' என வர்ணித்தார். சிறுசிறு சீர்திருத்தங்களுக்காகத் தங்களது ஆற்றலை விரயம் செய்வதாகக் காங்கிரஸ்காரர்களைச் சாடினார். தேசவிடுதலை. மக்கள் ஆதரவைத் திரட்டல், புரட்சியின்மூலம் மாற்றத்தை ஏற்படுத்துவது பற்றியெல்லாம் அரவிந்தர் எழுதினார். அதனால்தான் அவரை 'தீவிர இயக்கத்தின் தீர்க்கதரிசி' (Prophet of militant nationalism) எனக் கரன்சிங் வர்ணித்தார்.

**தீவிர தேசியம் தோன்றக் காரணங்கள்**

இந்திய தேசிய இயக்கத்தில் தீவிர தேசியம் தோன்ற பல காரணங்களும் சூழ்நிலைகளும் இருந்தன.

*1. 1858*ல் வெளியிடப்பட்ட பேரரசியின் பிரகடனம் ஏட்டுச் சுரைக்காயாகவே இருந்தது. அதில் கொடுக்கப்பட்ட உத்திரவாதங்கள் செயல்படுத்தப்படவில்லை. *1861, 1892* கவுன்சில் சட்டங்கள் மக்களுக்கு ஏமாற்றத்தையே அளித்தன. மிதவாதிகள் மதிப்பிழந்தனர்.

*2. 1896-97*ல் தலைவிரித்தாடிய பஞ்சத்தைக் கட்டுப்படுத்தவோ, பஞ்சத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணமளிக்கவோ அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை

எடுக்கத் தவறிவிட்டது. குறிப்பாக பம்பாய் ராஜதானியில் பரவிய கொள்ளைநோயை கட்டுப்படுத்த அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் மக்களைச் சினங்கொண்டு எழச் செய்தன. திலகர் அதிகாரிகளின் போக்கைச் சாடினார். பூனாவின் கொள்ளை நோய்க் கமிஷனர் ராண்டும் (Rand) அவரது உதவியாளர் லெப்டினண்ட் அயர்ஸ்டும் (Ayersl) சுட்டுக் கொல்லப்பட்டனர்.

3. மக்கள் பஞ்சத்தாலும், கொள்ளை நோயாலும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கையில் அரசாங்கம் விக்டோரியா மகாராணியாரின் பட்டமளிப்பின் வைரவிழாவைக் கொண்டாடுவதில் பணவிரயம் செய்தது. அது கண்டு மக்கள் ஆத்திரமடைந்தனர்.

4. அமெரிக்கா, கனடா, பிரிட்டிஷ் கொலம்பியா, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் ஒப்பந்தக் கூலிகளாகவும், பிழைப்புக்காகவும் சென்று தங்கிய இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்கள் பற்றி ஆங்கிலேய அரசாங்கம் அசட்டையாக இருந்தது. இந்தியத் தலைவர்கள் சிலரது கோபத்தைக் கிளறிவிட்டது.

5. இத்தாலியை அபிசீனியா தோற்கடித்தது (1896), ஜப்பான் ரஷ்யாவை வென்றது (1905) போன்ற நிகழ்ச்சிகளும்; சீனா, துருக்கி, எகிப்து, அயர்லாந்து ஆகிய நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகளும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய மாயையை அகற்றின. இந்திய இளைஞர்கள் எழுச்சி பெற்றனர். தீவிரவாதம் தூண்டிவிடப்பட்டது.

6. மிதவாதிகள் ஆங்கிலேயப் பண்பாடு, புகழ், அரசியல் அமைப்புகள் பற்றி புகழ்பாடிக் கொண்டிருக்கையில், பாலகங்காதர திலகர், பிபின் சந்திரபால், லாலா லஜபதிராய், அரவிந்தர், அன்னிபெசண்ட் அம்மையார் போன்றோர் இந்தியாவின் கடந்தகாலப் பெருமையின் அருமை கண்டு அதனடிப்படையில் வருங்கால இந்தியாவை உருவாக்க முனைந்தனர். மராட்டிய மாவீரர்களையும், 1857 கிளர்ச்சித் தலைவர்களையும் முன்மாதிரியாகக் கொண்டனர்.

7. பிரிட்டிஷாரின் இந்திய எதிர்ப்புக் கொள்கை தீவிர எண்ணங்கொண்ட தேசியவாதிகளுக்கு எரிச்சலூட்டியது.

8. மேலை நாடுகளில் எழுந்த விடுதலை இயக்கங்களும், கரிபால்டி, மாஜினி போன்ற போராட்டத் தலைவர்களின் தியாகச் செயல்களும் புரட்சிக் கருத்துகளும் எழுச்சியை ஏற்படுத்தின.

9. ஆங்கில அரசின் காலனி ஆதிக்கப் பொருளாதாரச் சுரண்டல் கொள்கையில் தீவிரவாத தேசியவாதிகளுக்குச் சற்றும் உடன்பாடில்லை. திலகர் கைது செய்யப்பட்டதால் 1908ல் ஏற்பட்ட பம்பாய் தொழிலாளர் வேலைநிறுத்தம், தேசியக் காற்று எத்திசை நோக்கி அடிக்கிறது என்பதைக் காட்டியது.

10. இந்திய வைசிராய் கர்சன் பிரபுவின் கொள்கை குளவிக் கூட்டில் கைவிட்ட கதையாயிற்று! தீவிரவாதம் தேசிய அங்கீகாரம் பெற்றது.

### தீவிரவாதிகள் என்பவர்கள் யார்?

ஆங்கிலேய ஆதிக்க அடக்குமுறைக் கொள்கையால் எரிச்சலடைந்தும் மிதவாதிகளின் தோல்வியால் ஏமாற்றமுற்ற காங்கிரஸ்காரர்களே தீவிரவாதிகளாயினர். காங்கிரசின் நோக்கிலும் போக்கிலும் அடிப்படை மாற்றம் ஏற்பட வேண்டுமென்று வற்புறுத்தினர். ஆங்கிலேயரது ஆட்சி இந்தியாவில் நீடிப்பதைத் தீவிரவாதிகள் எதிர்த்தனர். ஆங்கிலேயர்கள் அளிக்கும் சீர்திருத்தப் பிச்சைகளை ஏற்றுக் கொண்டால் தேசிய இயக்கத்தின் தீவிரம் தளர்ந்து விடும் என்று அவர்கள் அஞ்சினர். சுயராஜ்யமே (Swaraj) அவர்கள் குறிக்கோள். இந்தியர்களுக்குத் தங்களை தாங்களே ஆட்சிசெய்து கொள்ளக்கூடிய திறமை இருப்பதால் சுயாட்சி முறையே சிறந்த அரசியல் முறையெனத் தீவிரவாதிகள் கருதினர். தன்னாட்சி அமைப்பில்தான் மக்கள் தங்களது திறமையை, சுயமரியாதையை, தன்னம்பிக்கையை, தற்சார்புடைமையை, தியாக மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள முடியுமென அவர்கள் நம்பினர். சுதேசி, சுயராஜ்யம், விதேசிப் பொருள் புறக்கணிப்பு, தேசியக்கல்வி ஆகியவையே அவர்களது திட்டங்களாக இருந்தன. பாலகங்காதர திலகர், பிபின் சந்திரபால் ஆகியோர் பெருமைக்கும், புகழுக்குமுரிய தீவிரவாதத் தலைவர்களாகத் திகழ்ந்தனர்.

### சூரத் காங்கிரஸ் பிளவு, 1907

#### காசி காங்கிரஸ் 1905

மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே இருந்த மாறுபாடுகளும், முரண்பாடுகளும் வளர்ந்துகொண்டே சென்றனவேயன்றிக் குறையவில்லை. அவர்களுடைய மனப்பான்மையும், அணுகுமுறையும், போராட்ட முறைகளும் இருசாராரையும் இருதுருவங்களாக்கிவிட்டன. அவர்களுக்கிடையே இருந்த இடைவெளி காங்கிரசை இரண்டாகப் பிளவுபடுவதைத் தவிர்க்க முடியாததாக்கிவிட்டது. வங்காளத்தில் சுதேசி இயக்கம் சூடுபிடித்து சுழன்றடித்துக் கொண்டிருக்கையில்தான் காசியில் காங்கிரஸ் கூடியது (1905). அக்கூட்டத்துக்கு கோகலே தலைமை தாங்கி சுதேசி இயக்கத்தின் பெருமை பற்றிப் புகழ்ந்துபேசிய போதிலும், தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, பெரோஸ்ஷா மேத்தா போன்ற பிற மிதவாதத் தலைவர்கள் காலத்தின் மாற்றத்துக்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ளத் தயாராயில்லை. திலகர் 'சாத்வீகப்போராட்டம்' பற்றிக் கொண்டுவந்த தீர்மானம் மிதவாதிகள், தீவிரவாதிகளிடையே பலத்த சர்ச்சையை ஏற்படுத்திவிட்டது. ஆனால் நெருக்கடியை உத்தேசித்து மோதலைத் தவிர்த்தனர்.

#### கல்கத்தா காங்கிரஸ், 1906

அடுத்த ஆண்டு (1906) காங்கிரஸ் கல்கத்தாவில் கூடியது. அதற்குமுன் வங்கப் பிரிவினை 'முடிந்த முடிவு' என்ற மார்லி பிரபுவின் அறிவிப்பு தீவிரவாதிகளை வெகுண்டெழச் செய்தது. அதேபோன்று வங்கப் பிரிவினையை எதிர்த்த ஆர்ப்பாட்டக்காரர்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறை மக்களிடையே மனக்குமுறலை ஏற்படுத்தியது. அப்பின்னணியில் தான் கல்கத்தா காங்கிரஸ் கூடியது. திலகரே அக்காங்கிரசின் தலைவராக வேண்டுமெனத் தீவிரவாதிகள் விரும்பினர். ஆனால் அதை மிதவாதிகள் எதிர்த்தனர்.

'காங்கிரஸ் தாத்தா' தாதாபாய் நௌரோஜி தலைமை தாங்க ஒப்புக்கொண்டதால் தலைமை பற்றிய சிக்கல் தீர்ந்தது. நௌரோஜி ஆங்கிலேய அரசாங்கத்தின் 'காட்டுமிராண்டிக் கொடுங்கோலாட்சியைக்' கண்டித்தார். சுயராஜ்யமே காங்கிரசின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்றார். சுதேசி, விதேசிப் பொருள் புறக்கணிப்பு தேசியக் கல்வி பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தீவிரவாதிகளுக்குக் கிடைத்த வெற்றி அது.

**சூரத் காங்கிரஸ், 1907 :**

எனினும் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே இருந்த இடைவெளி குறையவில்லை. இரு பிரிவினரும் தங்களது பலத்தை சோதித்துக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். காங்கிரஸ் நாகபுரியில் (Nagpur) கூடுவதாக இருந்தது. நாகபுரி தீவிரவாதிகளின் கோட்டை. எனவே, காங்கிரஸ் கூடுமிடம் மிதவாதிகளின் அரணான சூரத் (Surat)துக்கு மாற்றப்பட்டது! சூரத் காங்கிரஸ் 1907 டிசம்பர் 26ஆம் நாள் கூடிற்று. அக்கூட்டம் குருஷேத்திரப் போர்க்களமாகக் காட்சியளித்தது. திலகர் மூன்று முக்கிய கோரிக்கைகளைச் சூரத் காங்கிரசின் பரிசீலனைக்குக் கொண்டு வந்தார்:

1. கடந்த ஆண்டு கல்கத்தா காங்கிரசின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அனைவரும் பின்பற்ற வேண்டும்.

2. விஷயாலோசனைக்குழு (Subjects Committee) உறுப்பினர்கள் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

3. காங்கிரஸ் கூட்டத் தலைவரைப் பிரதிநிதிகளே தேர்ந்தெடுக்க வேண்டும்.

திலகரின் அம்மூன்று கோரிக்கைகளையும் மிதவாதிகள் நிராகரித்து விட்டனர். டாக்டர் ராஷ்பிஹாரி கோஷின் (Dr. Rash Behari Ghose) பெயர் முன்மொழியப்பட்டது. தீவிரவாதிகள் அதிர்ச்சியடைந்தனர். எஸ்.என்.பானர்ஜி கோஷின் பெயரை வழிமொழியச் சென்றபோது கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

அடுத்த நாள்( 27 டிசம்பர்) காங்கிரஸ் கூடியபோது எஸ்.என். பானர்ஜி தனது பேச்சை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார். காங்கிரஸ் கூட்டத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட முறை பற்றிப் பேச விரும்பினார். ஆனால் அவர் பேச அனுமதிக்கப்படவில்லை! தன் பேச்சுரிமையை நிலைநாட்ட மேடைக்குச் சென்ற திலகரைப் பேசவிடவில்லை. எனவே கூட்டத்தில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டன. மிதவாதிகளும், தீவிரவாதிகளும் மோதிக்கொண்டனர். நாற்காலிகள் தூக்கி எறியப்பட்டன! செருப்புகள் வீசப்பட்டன! ஒரு செருப்புமேடையில் வீற்றிருந்த சுரேந்திரநாத் பானர்ஜி, பெரோஸ்ஷா மேத்தா ஆகியோரை உரசிச் சென்றது என்று பி.பட்டாபி சீத்தாராமையா எழுதியுள்ளார்!! போலீசார் பந்தலுக்குள் நுழைந்து நிலைமையைக் கட்டுப்படுத்தி அமைதியை ஏற்படுத்தினர். மறுநாள் (28 டிசம்பர்) மிதவாதிகள் டாக்டர் ராஷ் பிஹாரி கோஷின் தலைமையிலும் , தீவிரவாதிகள் அரவிந்த் கோஷின் தலைமையிலும் தனித்தனியாகக் கூடித் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டனர். காங்கிரஸ் பிளவுபட்டது. இதுவே 'சூரத் பிளவு' (Surat Split) என்றழைக்கப்படுகிறது.

**மதிப்பீடு**

சூரத் காங்கிரசுக்குப் பின் காங்கிரஸ் வீடு இரண்டுபட்டது. ஒரு பிரிவினர் கோகலேயின் தலைமையிலும், மற்றுமொரு பிரிவினர் திலகரின் தலைமையிலும் செயல்பட்டனர். காங்கிரசின் நோக்கிலும் போக்கிலும் தெளிவு உண்டாக சூரத் பிளவு வழி வகுத்தது. இரு அணிகளிலும் இருந்தோரின் சிறந்த திறமைகள் வெளிவர வாய்ப்புண்டாயிற்று. இந்திய அரசியலில் இரு கட்சி அமைப்புமுறை (Two party system) உருவாயிற்று. இருப்பினும் சூரத் பிளவு காங்கிரசையும், தேசிய இயக்கத்தையும் பலவீனப்படுத்திவிட்டது. தேசிய சக்தி சிதறுண்டு போயிற்று. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் தானே ஆங்கிலேய அரசு இப்பிளவைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டது. அது மிதவாதிகளை ஆதரித்து தீவிரவாதிகளை அடக்கியது. லாலா லஜபதிராயும், அஜித் சிங்கும், திலகரும் கைது செய்யப்பட்டு பர்மாவிலுள்ள மாண்டலே சிறைக்கனுப்பப்பட்டனர். பல அடக்குமுறைச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. பிரிந்த காங்கிரஸ்காரர்கள் மீண்டும் 1916 லக்னோ காங்கிரசில் ஒன்று கூடினர்.

**தமிழ்நாட்டில் தீவிரவாதம்**

பொதுவாகத் தமிழ்நாடு மிதவாதிகளின் பூங்காவாகக் காட்சியளித்தது. பூங்காவுக்குள் புகுந்த புயலாக வந்தார் பிபின் சந்திரபால் (1907). சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்தார். வீரமுழக்கமிட்டார். சென்றவிடமெல்லாம் தீவிரவாத விதைகளைத் தூவிச் சென்றார். பல தமிழர்கள் நீண்ட உறக்கத்திலிருந்து மீண்டனர். தீவிரவாதிகளாயினர். வ.உ.சிதம்பரம் பிள்ளையும் அவரது நண்பர் சுப்பிரமணிய சிவாவும் தமிழ்நாட்டில் தீவிரவாத இயக்கத்துக்குத் தலைமையேற்று நடத்தினர். குறிப்பாக வ.உ.சிதம்பரம் பிள்ளை சுதேசி கப்பல் கம்பெனி (Swadeshi Navigation Company) யை ஆங்கிலேயர் நடத்திய 'இந்திய நீராவி கப்பல் கம்பெனி (Indian Steam-Navigation)க்குப் போட்டியாகத் துவங்கினார். தொழிலாளர் நலனில் அக்கறை கொண்ட அவர் 'கோரல் தொழிற்சாலை' (Coral mill) நிர்வாகிகளுடன் பேசித் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தார். சிறைமீண்ட பிபின் சந்திர பாலரைப் பாராட்டும் பொருட்டு தடையை மீறிப் பொதுக்கூட்டத்தில் பேசியதற்காக வ.உ.சி. கைது செய்யப்பட்டு (1908 மார்ச் 8) நான்காண்டுகளுக்குப் பின் விடுதலை செய்யப்பட்டார். 'தமிழ்நாட்டுத் திலகர்' என்றழைக்கப்பட்ட வ.உ.சியைப் போன்றே சுப்பிரமணிய சிவாவும், வ.வே.சுப்பிரமணிய ஐய்யரும், வாஞ்சிநாதனும், சுப்பிரமணிய பாரதியாரும் தங்கள் சொல்லாலும், செயலாலும் தமிழ்நாட்டில் தீவிரவாதத்தை நிலைகொள்ளச் செய்தனர்.

**மதிப்பீடு**

எரிமலை வெடித்துச் சிதறியதைப்போன்று தீவிரவாதிகள் இந்திய தேசிய இயக்கத்தில் பிரவேசித்தனர். அவர்களுடைய பிரவேசம் விடுதலைப் போராட்டத்துக்கு வேகத்தையும், அழுத்தத்தையும், அவசரத்தையும் உருவாக்கிக்கொடுத்து, வகுப்பு (Class) இயக்கமாக இருந்த காங்கிரஸ் மக்கள் (Mass) இயக்கமாக மாறியதற்குத் தீவிரவாதிகளே காரணமாயிருந்தனர். இவர்கள் இந்தியாவில் தீவிர தேசியத்தைப் பரப்பினார்கள். எனினும் தீவிரவாதம் இந்திய

மண்ணில் வேரூன்றவில்லை. தீவிரவாத இயக்கத்தை அரசாங்கம் தனது அடக்குமுறை நடவடிக்கைகளால் ஒடுக்கிவிட்டது. தீவிரவாதத் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். தீவிரவாதிகளின் தலைவர்களுக்குத் தலைவராக விளங்கிய திலகர் 1908ல் கைது செய்யப்பட்டு பர்மாவிலுள்ள மாண்டலே சிறைக்கனுப்பப்பட்டு 1914ஆம் ஆண்டு தான் விடுதலை செய்யப்பட்டார். மிதவாதிகள் தீவிரவாதிகளிடம் விரோத மனப்பான்மையுடனேயே நடந்து கொண்டார்கள். மக்கள் தீவிரவாதிகளின் திட்டங்களில் அனுதாபம் காட்டினார்களேயன்றி, வெளிப்படையாக வந்து ஆதரிக்கவில்லை. தலைவர்களெல்லாம் சிறைக்கூடத்தில் அடைக்கப்பட்டு விட்டதால் தீவிரவாத இயக்கம் தலைமையின்றித் தவித்தது. திலகர் விடுதலை பெற்றுத் தாயகம் திரும்பியவுடன் தீவிரவாத இயக்கம் 'சுயாட்சி இயக்கமாக' (Home Rule Movement) உருவெடுத்தது.

**மிதவாதிகளும் தீவிரவாதிகளும்: ஒப்பீடு**

மிதவாதிகள் துவக்க காலக் காங்கிரஸ் தேசியவாதிகள். அவர்கள் 1885லிருந்து 1916 வரை காங்கிரசில் ஆதிக்கம் செலுத்தினார்கள். தீவிரவாதிகள் பிற்கால காங்கிரஸ் முற்போக்கு தேசியவாதிகள். வங்கப் பிரிவினை சுதேசிப் போராட்டத்தின்போது (1905) தலைதூக்கி சூரத் பிளவுக்குக் காரணமாயிருந்தது (1907). காந்தி இந்திய விடுதலைப் போராட்டத்துக்குத் தலைமையேற்கும் வரை (1919) தேசிய இயக்கத்தில் கொடிகட்டிப் பறந்தனர்.

மிதவாதிகள் பிரிட்டிஷ் முடியாட்சியின் விசுவாசிகள். இந்தியா இயல்பாக, பரிணாம வளர்ச்சி பெறவேண்டுமாயின் ஆங்கிலேய ஆதரவு இன்றியமையாதது என்று மனப்பூர்வமாக நம்பியவர்கள். இங்கிலாந்து இந்தியாவை ஆக்கிரமித்து ஆட்சி செய்வது ஆண்டவன் கட்டளை என்று கருதினார்கள்; பிரிட்டிஷாரின் நீதி நியாய உணர்வின்மீது தங்களது எதிர்ப்புகளை வளர்த்துக் கொண்டவர்கள் மிதவாதிகள். மாறாக, தீவிரவாதிகள், ஆங்கிலேய ஆட்சியைச் சாபக்கேடாகக் கருதினார்கள், சாத்தான் ஆட்சியாகவே பார்த்தார்கள். பிரிட்டிஷாரை ஆதரிப்பது அவர்களுக்கு நாட்டுப்பற்றற்ற செயலாகப்பட்டது. அந்நிய ஆட்சி ஆதரவும், சுயாட்சி முறையும் என்றுமே ஒன்றுபட முடியாது என்று தீவிவாதிகள் முடிவு கட்டினர்.

கனடா, ஆஸ்திரேலியா போன்று இந்தியாவும் பிரிட்டிஷ் பேரரசின் டொமினியனாகத் (Dominion) திகழ வேண்டுமென்பதே மிதவாதிகளின் குறிக்கோள். பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ், இந்திய அரசியல் சட்ட அமைப்புமுறையில் மாற்றங்களை ஏற்படுத்தி இந்தியரது நலனைக் காக்க வேண்டுமென்று முயன்றார்கள் மிதவாதிகள். மாறாக இங்கிலாந்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதே தீவிரவாதிகளின் இலட்சியமாக இருந்தது. சுயராஜ்யம் தங்களது பிறப்புரிமை என்று பறைசாற்றியவர்கள் அவர்கள். மிதவாதிகள் நோயின் அறிகுறிகளைப் போக்க முனைந்தார்களென்றால் தீவிரவாதிகள் நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்புச் செய்வதில் வல்லவர்களாய் இருந்தனர்.

இருசாராரும் தாங்கள் மேற்கொண்ட முறைகளில் மாறுபட்டனர். மிதவாதிகள் சமரசத்திலும், சமாதானத்திலும் சலுகைகளைப் பெறுவதிலும் குறியாக இருந்தனர். சட்ட வரம்புக்குட்பட்ட எதிர்ப்பே மிதவாதிகளுடையது. விதிகளின்படி அரசியல் விளையாட்டை விளையாடினார்கள் அவர்கள். பேச்சுவார்த்தைகளாலும், பிரார்த்தனைகளாலும் விண்ணப்பங்களாலும் வேண்டுகோள்களாலும் தூதுக் குழுக்களின் மூலமாகவும் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று செயல்பட்டார்கள் மிதவாதிகள். ஆனால் தீவிரவாதிகளோ நேரடிப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். வன்முறையில் ஈடுபடாவிட்டாலும்; ஆட்சியை ஸ்தம்பிக்க வைத்து தங்களது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளத் தயங்காதவர்கள். வீடு பற்றி எரியும்போது வீதியில் நின்று கொண்டு வெட்டிப்பேச்சில் ஈடுபட மறுத்தவர்கள் தீவிரவாதிகள். மிதவாதிகள் விவேகத்துடன் செயல்பட்டனர்; தீவிரவாதிகள் வேகத்துடன் காரியத்தில் ஈடுபட்டனர்.

மிதவாதிகளும் தீவிரவாதிகளும் காங்கிரசின் தன்மைபற்றிக் கருத்து வேறுபாடு கொண்டிருந்தனர். ஆங்கிலம் பயின்று, ஆங்கிலேய ஆட்சியின் விசுவாசிகளான மேல்தட்டு மக்களாகிய மிதவாதிகள் காங்கிரசை வகுப்பு அமைப்பாகவே (Class organisation) வைத்திருந்தனர். செல்வந்தரும், செல்வாக்குமிக்கோருமே காங்கிரசில் இடம் பெற்றிருந்தனர். மிதவாதிகள் மண்ணில் நடக்காது விண்ணில் மிதந்து கொண்டிருந்தவர்கள். வகுப்பு அமைப்பாக இருந்த காங்கிரஸ், 'மக்கள் இயக்கமாக' மாற்ற முனைந்தார்கள் தீவிரவாதிகள். மக்களே தங்களுடைய தலைவிதியைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். எனவே அவர்கள்தான் காங்கிரஸ் இயக்கத்தில் பங்குகொள்ள வேண்டியது இன்றியமையாதது என்று வற்புறுத்தினார்கள். மக்கள் ஆதரவு என்ற அடித்தளத்தைக் காங்கிரசுக்குத் தேடித்தந்தவர்கள் தீவிரவாதிகள்தான்.

காங்கிரசைத் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்க மிதவாதிகளும், தீவிரவாதிகளும் போட்டியிட்டனர். மிதவாதிகள் துவக்க காலத்திலிருந்து 1916 வரை காங்கிரஸ் கோட்டையைத் தங்களது ஆதிக்கத்தின்கீழ் வைத்திருந்தனர். மிதவாதிகளின் நோக்கிலும் நடைமுறையிலும் நம்பிக்கையிழந்த தீவிரவாதிகள் கோட்டைக்குள்ளிருந்தே காங்கிரசைக் கைப்பற்ற முனைந்தனர். அம்முயற்சி தோல்வியடைந்தபோது காங்கிரஸ் பிளவுபட்டது (1907). தீவிரவாதிகள் வெளியிலிருந்தவாறு காங்கிரஸ் கோட்டையைக் கைப்பற்றும் தருவாயில் பிரிந்திருந்த இருசாராரும் ஒருங்கிணைந்தனர் (1916).

சுயாட்சிக்கு இந்தியர்கள் தகுதியுடையவர்கள்தானா என்பதுபற்றி மிதவாதிகளும், தீவிரவாதிகளும் மாறுபட்டனர். இந்தியர்கள் சுயாட்சிக்குத் தேவையான தகுதிகளைப் பெற்றிருக்கவில்லை. எனவே அவர்களுக்கு அரசியல் கல்வியும், பயிற்சியும், பொறுப்பும் கொடுத்து சுயாட்சிக்குத் தயார் செய்ய வேண்டும் என்று எண்ணினார்கள் மிதவாதிகள். இந்தியர்களின் திறமையின்மை, ஒற்றுமையின்மை, நாட்டுப்பற்றின்மை, கல்வி அறிவின்மை, மூடக் கருத்துக்கள், இன, சமய,சாதி, பிராந்திய காழ்ப்புணர்ச்சிகள் ஆகியவை ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் ஏற்படவும், நிலைபெறவும் காரணமாக இருந்தமையால் அக்குறைபாடுகளையெல்லாம் களைந்த பின்னர் - சுயாட்சி முறைக்காகப்

போராடலாம் என்பது மிதவாதிகளின் கணிப்பு. அந்தக் கணிப்பைத் தீவிரவாதிகள் ஒப்புக் கொள்ளவில்லை. குறையற்றதாயினும் அந்நிய ஆட்சியைவிடக் குறைபாடுடைய சுயாட்சியே சிறந்ததென வாதிட்டனர் தீவிரவாதிகள். சுயாட்சியை நடத்துவதற்கான இயல்பான திறமைகள் இந்தியர்களுக்குண்டு என்று சாதித்தார்கள் அவர்கள்.

**விடுதலைப் போராட்டத்தில் திலகரின் பங்கு**

பால கங்காதர திலகர் (1856-1920) 'இந்தியத் தீவிரவாத இயக்கத்தின் தந்தை' ஆவார். தீவிர தேசியத்தின் மொத்த உருவமாகத் திகழ்ந்தவர் திலகர். பம்பாய் பல்கலைக் கழகத்தின் சட்டப் பட்டதாரியாயினும்கூட திலகர் அரசுப் பணியில் சேராமல் தேச சேவையில் ஈடுபட்டார். பூனா நவீன ஆங்கிலப் பள்ளி, தக்காண கல்விக் கழகம், பெர்குசன் கல்லூரி ஆகியவை துவக்கப்பட திலகர் உதவி செய்தார். மராத்தி வார ஏடு 'கேசரி' (The Kesari)யும், ஆங்கிலப் பத்திரிகை 'மராத்தா' (The Mahratta) திலகரால் துவக்கப்பட்டவையாகும். கோகலே, அகர்கார் போலன்றி திலகர் சமூக சேவையைவிட அரசியல் சுதந்திரமே முக்கியமென்று கருதினார். எனினும் அரசாங்கம் சமுதாயப் பழக்கவழக்கங்களில் தலையிட்டபோது திலகர் எதிர்க்கத் தவறவில்லை.

மக்களிடையே தேசியத்தை வளர்க்கத் திலகர் சமயப் பண்டிகைகளை நன்கு பயன்படுத்தினார். பொதுக் கூட்டங்களைவிட பண்டிகைகள்மூலம் மக்களை தேசிய இயக்கத்தில் ஈடுபடுத்தலாம் என்றெண்ணிய திலகர் 1893ஆம் ஆண்டு கணபதி பண்டிகையைத் (Ganapathi Festival) துவக்கினார். பல நாட்கள் கொண்டாடப்பட்ட அப்பண்டிகையின்போது வீதிகள் வழியே பெரிய கணபதி, உருவச் சிலைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன; துதிப் பாடல்களைப் பாடிக்கொண்டு இளைஞர்கள் அணிவகுத்துச் சென்றனர்; இந்து சமயத் தத்துவங்கள் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. இரண்டாண்டுகளுக்குப் பின்னர் 'சத்ரபதிசிவாஜி பண்டிகை' (Sivaji Festival) கொண்டாடப்பட்டது (1895). மக்களிடையே மிகுந்த செல்வாக்குப்பெற்ற இப்பண்டிகைகள் மகாராஷ்டிரத்தின் மூலை முடுக்கெல்லாம் பரவின. இவையன்றி பசுவதை எதிர்ப்புச் சங்கங்கள் (anti - cow killing societies), லாத்தி சங்கங்கள் (lathi clubs) போன்றவையும் துவக்கப்பட்டன. இவற்றின்மூலம் மறைமுகமாக அரசியல் நடவடிக்கைகளை மக்களிடையே குறிப்பாகக் கிராம மக்களிடையே புகுத்தினார் திலகர். இவற்றின் அடிப்படையில் எழுந்தவையே மேளாக்கள் (Melas ) என்ற இரகசிய கிளர்ச்சிக் கழகங்களாகும். திலகரால் கவரப்பட்ட இளைஞர்களே மேளாக்களில் சேர்ந்தனர். அஞ்சா நெஞ்சங்களான அவர்கள் போர்ப்பயிற்சி பெற்றார்கள். பல்வந்த இராமச்சந்திர நட்டு, ஹரி இராமச்சந்திர நட்டு என்ற 'நட்டு சகோதரர்கள்' மேளா இயக்கத்தை முன்னின்று நடத்தினர். அவர்கள் திலகரின் கூட்டாளிகள். வழக்காறு, சமயம், அரசியல் ஆகியவற்றைக் கலந்து தனது தீவிர தேசியத்துக்குப் பயன்படுத்தினார் திலகர்.

1897ல் பூனாவில் கொள்ளை நோய் பரவியபோது அதன் நிவாரணப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் திலகர். அப்போது அதிகாரிகளின் அத்துமீறிய போக்கை வன்மையாகக் கண்டித்தார். அரசாங்கம் திலகர்மீது ராசத் துரோகக்

குற்றம்சாட்டி பதினெட்டு மாத சிறைதண்டனை வழங்கியது. மக்கள் அவரை 'லோகமானியர்' என்றழைத்தனர். சிறையிலிருந்து விடுதலை பெற்றபின் திலகர் தேசிய அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார். வங்கப் பிரிவினைக் கெதிராகத் துவக்கப்பட்ட சுதேசி இயக்கத்தை முழுமனதுடன் ஆதரித்தார் (1905). திலகர் தனது தீவிரவாதத்தால் காங்கிரஸ் மிதவாதிகளின் விரோதத்தைத் தேடிக் கொண்டார். பனாரஸ் காங்கிரசில் தீவிரவாதிகள் தங்கள் பலத்தைக் காண்பித்தனர். கல்கத்தா காங்கிரசில் தீவிரவாதத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சூரத்தில் காங்கிரஸ் பிளவுபட்டது (1907). திலகர் மீண்டும் அரசதுரோகக் குற்றம் சுமத்தப்பட்டு (1908) ஆறாண்டு கடுந்தண்டனை பெற்று பர்மாவிலுள்ள மாண்டலே சிறைக்கனுப்பப்பட்டார். அச்சிறை வாசத்தின் போதுதான் திலகர் தனது 'கீதா இரகசியம்' (Gita Rahasya) என்ற நூலை எழுதினார்.

மாண்டலே சிறையிலிருந்து விடுதலையடைந்த திலகர் (1914 ஆகஸ்டு 30) மீண்டும் தீவிர அரசியலில் ஈடுபட்டார். சுயாட்சி சங்கத்தை (Home Rule League )த் துவக்கினார் (1916). தேசிய அரசியலில் நிலவிய மந்தநிலையைப் போக்கினார். லக்னோ காங்கிரசில் திலகரின் தலைமையில் தீவிரவாதிகள் மீண்டும் காங்கிரஸ் பாசறைக்குத் திரும்பினார்கள். காங்கிரஸ் முஸ்லீம் லீக் உடன்பாடு (Congress - League Pact) ஏற்படுவதற்கு திலகர் பெரிதும் காரணமாக இருந்தார். 1919 செப்டம்பர் மாதம் திலகர் இங்கிலாந்து சென்று சுயாட்சிக்கு ஆதரவாகச் சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்தார். ஈ.எஸ். மாண்டேகு திலகரைச் சந்தித்துத் தனது சீர்திருத்தத் திட்டங்களுக்கு அவரது ஆதரவைக் கோரினார். 1920 கல்கத்தா காங்கிரசுக்குத் திலகர் தலைமை தாங்குவதாக இருந்தது. ஆனால் அதற்கு முன்னரே திலகர் இயற்கை எய்தினார் (1920 ஆகஸ்டு 1).

திலகர் ஒரு பிறவிப் போராட்ட வீரர். தீவிர தேசியத்துக்காகத் தன் வாழ்நாள் முழுவதும் போராடிய தியாக சீலர் அவர். பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு போராடினார். காங்கிரஸ் மிதவாதிகளோடு போராடினார். அவர் மீது வீண்பழி சுமத்திய வாலண்டின் சிரோலுக் (Valentin Chirol)கெதிராக இங்கிலாந்து நீதிமன்றத்தில் போராடினார். திலகர்மீது அடுக்கடுக்காகத் தொடுக்கப்பட்ட அரசத் துரோகக் குற்றச்சாட்டு வழக்குகளுக்கெதிராகப் போராடினார். யாவற்றுக்கும் மேலாக "சுயராஜ்யமே நமது பிறப்புரிமை; அதை அடைந்தே தீருவோம்" என்று போர் முழக்கமிட்டு விடுதலைக்காகப் போராடினார் திலகர்.

34671

# பகுதி - II

## 11. வங்கப் பிரிவினையும் சுதேசி இயக்கமும், 1905

> சுதேசி இயக்கம் நம்முடைய சுயமரியாதை, தற்சார்புடைமை, சுயஉதவி ஆகியவற்றை உயர்த்தி, நமது வளங்களையும், திறமைகளையும் இன, நிற, சாதி வேறுபாடின்றிப் பயன்படுத்திக் கொள்ளக் கற்பிக்கின்றது.
>
> - லாலா லஜபதிராய்

### வங்கப் பிரிவினை

வங்காளம், ஒரிஸ்ஸா, பீஹார், சோட்டா நாக்பூர் ஆகிய பகுதிகள் சேர்ந்தே வங்காள ராஜதானியாக அமைந்திருந்தது. பரப்பளவில் பெரிதும் நிர்வாகத்துக்குக் கடினமாகவும் இருந்த அப்பெரிய ராஜதானியைப் பிரிப்பதற்கான முயற்சிகள் நாற்பதாண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு எவ்வித முடிவுக்கும் வராமல் இருந்தது ஆங்கிலேய அரசாங்கம். ஆனால் கர்சன் பிரபு வைசிராயாக வந்த உடனேயே *(1899-1905)* பிற நடவடிக்கைகளோடு வங்காளத்தைத் துண்டாக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். ஆழ்ந்த ஆலோசனைகளுக்குப்பிறகு தனது வங்கப்பிரிவினைத் திட்டத்தை 1905 டிசம்பர் மாதம் வெளியிட்டார் கர்சன் பிரபு.

#### காரணங்கள்

வங்காள ராஜதானி திறமையாக நிர்வகிக்க முடியாத அளவுக்குப் பெரிதாக இருந்தது. அதன் காரணமாக அரசியல் மாற்றங்களைச் செய்ய இயலவில்லை; கிழக்கு வங்காளம் வளர்ச்சி குன்றிப்போய்விட்டது; அதன் முன்னேற்றத்துக்குச் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டியநிலை. இத்தகைய காரணங்களைக் காட்டி வங்கப் பிரிவினைக்கான திட்டம் தயாரிக்கப்பட்டது. ஆனால் உண்மையான காரணம் வங்காளத்தில் இருந்த இந்திய தேசிய ஊற்றை அடைத்துவிட வேண்டும் என்பதுதான். வங்காள இந்து முஸ்லீம்களுக்கிடையே பிளவை ஏற்படுத்திவிட்டால் அக்காரியம் எளிதில் நிறைவேறிவிடும் என்ற தீர்மானத்தோடு தான் கர்சன்பிரபு வங்கப்பிரிவினைத் திட்டத்தை துரிதப்படுத்தினார். தனது பிரிவினைத் திட்டத்துக்கு ஆதரவு திரட்டும் பொருட்டு கர்சன்பிரபு கிழக்கு வங்காளத்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது *(1904)* அங்கிருந்த முஸ்லீம்களுக்கு பல சலுகைகளை வழங்கினார். வங்கப்பிரிவினையின் விளைவாக அசாம் கிழக்கு வங்க மாநிலத்தில் முஸ்லீம்களே பெரும்பான்மையினராயிருப்பர் என்றும்; அதன் தலைநகரான டாக்கா முஸ்லீம்களின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்குமென்றும்; தனி மாநிலத்தில் முஸ்லீம்கள் தங்களது சமயத்தையும் பண்பாட்டையும் சிதையாமல், சிதறாமல்

பாதுகாத்துக்கொள்ள முடியுமென்றும், முகலாயாது ஆட்சிக் காலத்தில் அனுபவித்த உரிமைகளையும் சலுகைகளையும் முஸ்லீம்கள் மீண்டும் பெறலாமென்றும்; யாவற்றுக்கும் மேலாக மேற்கு வங்க இந்துக்களின் ஆதிக்கத்திடமிருந்து நிரந்தரமாக விடுதலையடையலாமென்றும் கர்சன் பிரபு கிழக்கு வங்க முஸ்லீம்களுக்கு உத்தரவாதமளித்தார்.

**எதிர்ப்பு**

கர்சனின் வங்கப் பிரிவினைத் திட்டத்தை வங்கத் தலைவர்கள் துவக்கத்திலிருந்தே எதிர்த்து வந்தனர். பொதுக்கூட்டங்கள்போட்டு பிரிவினை திட்டத்துக்கெதிரான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சூளுரைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன். வைசிராய்க்கு எதிர்ப்பு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. வங்கப் பிரிவினைக்கு எதிராக 60,000 பேர் கையொப்பமிட்ட மனு ஒன்று இந்திய விவகார செயலரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த மனுவில் இந்திய விவகாரச் செயலர் உடனடியாகத் தலையிட்டுப் பிரிவினைத் திட்டத்தைத் தடுத்து நிறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். வங்கப் பிரிவினையைப் பத்திரிகைகள் கண்டித்தன. எவ்விதப் பயனுமில்லை. எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாத கர்சன் பிரபு வங்கப் பிரிவினை பற்றிய முடிவை 1905 ஜுலை 19ஆம் நாள் அறிவித்தார். அக்டோபர் 16ஆம் நாள் வங்கம் துண்டிக்கப்பட்டது. இந்திய தேசியத்தின் தோற்றுவாயாக இருந்ததற்காகத் தண்டிக்கப்பட்டது. 'பிரிட்டிஷாரின் பிரித்தாளும்' கொள்கைக்கு (Divide at impera ) வங்கப் பிரிவினை முதல்தா முன்னுதாரணம் என்று கூறியுள்ளார் ஆர்.பி.குரோனின்.

**சுதேசி இயக்கம்**

**துக்க தினம்**

வங்காளம் பிரிக்கப்பட்ட நாளான 1905 அக்டோபர் 16 தேசிய துக்கதினமாக வங்காளம் முழுவதும் கொண்டாடப்பட்டது. அன்று மக்கள் உண்ணா விரதமிருந்தனர். கல்கத்தாவில் 'அர்த்தால்' அனுஷ்டிக்கப்பட்டது. அன்று பாடுவதற்கென பிரத்யேகமாக இரவீந்திரநாத் தாகூரால் புனையப்பட்ட பாடலை மக்கள் பாடினர். ஊர்வலமாகச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் பங்கிம் சந்திரரின் 'வந்தே மாதரம்' பாடலைப் பாடிச் சென்றனர். ஆண்களும் பெண்களும் 'ரட்சா பந்தனம்' கட்டிக் கொண்டனர். ஆனந்தமோகன் போஸ் வங்காளிகளின் ஒற்றுமையின் அடையாளமாக 'இணைப்பு மண்டபத்தின்' அடிக்கல் நாட்டினார். ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள், தீர்மானங்கள் நிறைவேற்றல், விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல், எதிர்ப்புக் கோஷங்களை முழக்கமிடல் போன்ற எதிர்ப்பு நடவடிக்கைகளோடு மட்டும் திருப்தியடையவில்லை. அவர்கள் நேரடி நடவடிக்கைகளில் இறங்க முடிவு செய்தனர். 'சுதேசி இயக்கம்' பிறந்தது.

**சுதேசி ஆதரவு**

இந்தியப் பொருள்களைப் பயன்படுத்தல், தற்சார்புடைமை, சுய உதவி ஆகியவை சுதேசி இயக்கத்தின் நோக்கங்களாகும். அது ஒரு அரசியல், பொருளாதார, ஆன்மிக ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டது. பொதுக்கூட்டங்களில் சுதேசியப் பொருள்களையே உபயோகிப்பது என்றும், விதேசிப் பொருள்களைப் புறக்கணிப்பதென்றும் உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது. நிர்மாணப்

பணியைக் கவனித்துக் கொள்வதற்கென 'சுதேசி சமாஜ்' என்ற அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. தொண்டர்கள் சுதேசி வேலைத் திட்டங்களை மேற்பார்வையிட்டனர். சுதேசி நெசவாலைகள், சோப்பு, தீப்பெட்டித் தொழிற்சாலைகள், வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கம்பெனிகள் துவக்கப்பட்டன. இவ்வியக்கத்தை வளர்க்க ஏராளமான நிதி திரட்டப்பட்டது. சுதேசி இயக்கம் ஒரு இயக்கமாக மலர்ந்தது.

**விசேதிப் புறக்கணிப்பு**

சுதேசி இயக்கத் தலைவர்கள் விதேசிப் பொருள்களைப் புறக்கணிப்பதன்மூலம் இந்தியர்களை ஆங்கிலேயரது பொருளாதாரச் சுரண்டலிலிருந்து விடுவிக்க எண்ணினர். இங்கிலாந்து துணியுடன் ஆங்கிலத்தையும் புறக்கணித்தல்; அரசாங்க கவுரவப் பட்டங்களை துறத்தல், சட்ட மன்றங்கள், உள்ளாட்சி மன்றங்களிலிருந்து விலகல், விதேசிப் பொருள்களை வாங்குவோரை சமூகப் பிரதிஷ்டம் செய்தல் ஆகியவை இப்பொருள் புறக்கணிப்புத் திட்டத்தில் அடங்கும். வெளிநாட்டு மருந்துகளைப் பயன்படுத்த நோயாளிகள் மறுத்துவிட்டனர். மான்செஸ்டர் துணிகளும் வெளிநாட்டு சிகரெட்டுகளும் பொது இடங்களில் கொளுத்தப்பட்டன.

**தேசியக் கல்வி**

சுதேசி இயக்கத் தலைவர்கள் விதேசிப் பொருள்களோடு விதேசிக் கருத்துக்களையும் புறக்கணித்தனர். மேற்கத்திய கல்விமுறை இகழப்பட்டது. மாறாக இந்தியப் பண்பாடு, தத்துவம், மரபு வாழ்க்கை வழி ஆகியவை புகழப்பட்டது. கடந்த காலப் பெருமை பேசினர். இளைஞர்களிடையே தேசிய உணர்ச்சியை ஏற்படுத்த தேசிய கல்விக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஏட்டுக்கல்வி, தொழிற்கல்வி, உடற்பயிற்சிக் கல்வி ஆகியவை இந்நிலையங்களில் போதிக்கப்பட்டன; இவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது 'விடிவெள்ளிக் கழகங்கள்' (Dawn Societies) தேசியத்தின் நாற்றங்கால்களாகத் திகழ்ந்தன. மாணவர்களிடையே நாட்டுப்பற்றும், சுயசார்புடைமையும் தியாக மனப்பான்மையும் வளர்க்கப்பட்டன. 1906ஆகஸ்டு 15ல் ஒரு தேசியக் கல்வி மன்றம் (National Council of Education) ஏற்படுத்தப்பட்டது.

**சாத்வீக எதிர்ப்பு**

வங்கப் பிரிவினை 'முடிந்த முடிவு' என்று மார்லி பிரபு அறிவித்தவுடன் தீவிரவாதிகள் 'சாத்வீக எதிர்ப்பை' (Passives Resistance)த் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டனர். மாணவர்கள் அரசாங்கப் பள்ளிகளையும், கல்லூரிகளையும் புறக்கணிக்க வேண்டும். அதேபோன்று நீதிமன்றங்கள், சட்டமன்றங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள், அலுவலகங்கள் ஆகியவையும் புறக்கணிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டனர். அரசாங்கத்துடன் ஒத்துழைக்காததன் மூலம் நிர்வாகத்தை முடக்கிவிட வேண்டும் என்பதே சாத்வீக எதிர்ப்பின் நோக்கமாகும். சாத்வீக எதிர்ப்பியக்கத்திற்குத் தலைமை தாங்குவதற்காக அரவிந்தர் தனது வேலையைத் துறந்துவிட்டு பரோடாவிலிருந்து வங்காளத்திற்கு வந்தார். பாலகங்காதர திலகர், லாலா லஜபதிராய் போன்றோர் சுதேசி இயக்கத்தில் மிகுந்த அக்கறை காட்டி அதை ஒரு அகில இந்திய இயக்கமாக்கினர்.

**அடக்குமுறை**

சுதேசி இயக்கத்தின் வெற்றி கண்டு அரசாங்கம் சினங்கொண்டது. அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது. கூட்டங்கள் கலைக்கப்பட்டன. ஆர்ப்பாட்டக்காரர்கள் மூர்க்கத் தனமாகத் தாக்கப்பட்டனர். தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். பேச்சுச் சுதந்திரம் பறிக்கப்பட்டது. கூட்டங்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் தடை செய்யப்பட்டன. சுதேசி இயக்கத்தில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு அரசாங்கப் பணிகளில் இடமில்லை என்று அறிவிக்கப்பட்டது. வெளிநாட்டுச் சர்க்கரையில் செய்யப்பட்ட இனிப்புப் பண்டங்களை விட்டெறிந்தமைக்காக மாணவர்கள் கைது செய்யப்பட்டு, சிறைக்கு அனுப்பப்பட்டனர். வீடுகளில் புகுந்து சோதனையிடுவதும் உளவு பார்ப்பதும் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதும் அன்றாட வழக்கமாயின. வங்காளத்தில் சுரேந்திரநாத் பானர்ஜி, பிபின் சந்திர பால், அரவிந்தரும், பஞ்சாப்பில் லாலா லஜபதிராயும், மகாராஷ்டிரத்தில் திலகரும், தமிழ்நாட்டில் வ.உ.சிதம்பரம் பிள்ளையும், ஆந்திராவில் ஹரிசர்வோத்தம் ராவும் பிறரும் கைது செய்யப்பட்டனர். பல கட்டுப்பாட்டுச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

**விளைவுகள்**

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் வங்கப் பிரிவினைக்கெதிராக எழுந்த சுதேசி இயக்கம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. வங்காளத் தீவிரவாதிகள் விண்ணப்பம், வேண்டுகோள் முறையோடு நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டனர். அவர்களது நோக்கங்கள் தெளிவாக்கப்பட்டன. மக்களுக்குச் சுயசார்புடைமை, தன்னம்பிக்கை, தன்மானம், சுயஉதவி பற்றிய உணர்வுகள் உண்டாயின. இந்திய எதிர்ப்பு யாசிக்கும் நிலையிலிருந்து (mendicancy) நேரடிப் போராட்ட (militancy) நிலைக்கு மாறியது. சுதேசிய இயக்கம் வங்காளத்துக்கு வெளியேயும் பரவி அகில இந்திய ஆதரவைப் பெற்றது. வங்காளத்தில் மக்கள் இலக்கியம் விரைந்து வளர்ந்தது. மக்களுக்கு போலீஸ், சிறை ஆகியவற்றின் மீதிருந்த அச்சம் அகன்றது. தாக்கப்படுவதும் சிறை செல்வதும் தேசத்தொண்டாகக் கருதப்பட்டன. துன்பத்தாலும் தியாகத்தாலும் மட்டுமே ஆங்கிலேய அரசாங்கத்தை அடிபணிய வைக்க முடியும் என்ற புதிய பாடத்தைத் தலைவர்களும் மக்களும் புரிந்து கொண்டனர். ஐக்கிய இந்தியாவின் பொதுச் சமயம் ' என்று லாலா லஜபதிராயால் கருதப்பட்ட சுதேசி இயக்கத்தின் விளைவாக வங்கப்பிரிவினை 1911ஆம் ஆண்டு விலக்கிக் கொள்ளப்பட்டது.

**மதிப்பீடு**

சுதேசி இயக்கம் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கியது என்பதில் ஐயமில்லை. எனினும் அவ்வியக்கத்தில் சில குறைபாடுகள் காணப்பட்டன. முதலாவதாக சுதேசி இயக்கம் வங்காளத்தின் மேல்மட்ட 'பத்ரலோக்' (Bhadralok ) இந்துக்களால் முனைப்பார்வத்துடன் முன்னின்று நடத்தப்பட்டது. அதனால் அப்போராட்டத்துக்கு இன முலாம் பூசப்பட்டது. இரண்டாவதாக, அது இந்து சமய அடிப்படையிலும் இந்து சமுதாய சம்பிரதாயங்களையொட்டியும் மேற்கொள்ளப்பட்டது. எனவே, அச்சமயச் சார்புடைய விடுதலைப் போராட்டம் சமயச் சார்பின்மைத் தன்மையைப் பாதித்தது. மூன்றாவதாக, சுதேசி இயக்கத்தில் முஸ்லீம்களும், விவசாயிகளும், பிறரும் பெருவாரியாகப் பங்கேற்கவில்லை. நான்காவதாக, தீவிரவாதிகளின் சுதேசி, சுயராஜ்யக் கோரிக்கை காரிய சாத்தியமற்றது. அதற்கான பக்குவத்தை

பெறவில்லை. தலைவர்களுக்குள்ளேயே இவை பற்றிய கருத்து வேறுபாடுகள் இருந்தன. ஐந்தாவதாக, சாத்வீகப் போராட்டமும் வர்த்தகப் போரும் நடைமுறைச் சாத்தியமற்றவை. அதனால்தான் விதேசிப் பொருள் புறக்கணிப்பு தோல்வியுற்றது. இறுதியாக, போதிய முன்னேற்பாடுகளின்றி அரசாங்கப் பணிகள் சட்டமன்றங்கள், நீதிமன்றங்கள், கல்விக் கூடங்கள் ஆகியவற்றைப் புறக்கணித்து நாட்டின் வளர்ச்சியை குறிப்பாக வங்காளத்தின் வளர்ச்சியைத் தேக்கமுறச் செய்தது.

சுதேசி இயக்கம் அரசாங்கத்தால் அடக்கப்பட்டாலும் அந்த நேரத்துக்குத் தோல்வியுற்றது போல் தோன்றினாலும் அது விதைத்த சுதேசி, சுயராஜ்ய விதைகள் வீண்போகவில்லை. கர்சனின் காட்டு தர்பாரால் தேசிய உணர்வை ஒடுக்க முடியவில்லை. 1906ல் கல்கத்தாவில் கூடிய மிதவாத காங்கிரஸ்கூட சுதேசி இயக்கத் திட்டங்களை ஆதரித்துத் தீர்மானங்களை நிறைவேற்றியது. அக்கூட்டத்துக்குத் தலைமை வகித்த தாதாபாய் நௌரோஜி 'சுயராஜ்ய' கோஷத்தை எழுப்பினார். அவரது வார்த்தைகள் சுயராஜ்ய இலக்கை நோக்கி மக்கள் நடைபோடுவதற்கான வேட்கையையும் உந்து சக்தியையும் தந்தன. ஆறாண்டுகளுக்குப்பின் வங்கப் பிரிவினை ரத்து செய்யப்பட்டது சுதேசி இயக்கத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

**சுரேந்திரநாத் பானர்ஜி 1848-1925**

சுரேந்திரநாத் பானர்ஜி தனது 20வது வயதில் ஐ.சி.எஸ். பதவிக்குத் தகுதிபெற்ற முதல் இந்தியர் ஆவார். இனப்பாகுபாட்டால் பதவிநீக்கம் செய்யப்பட்ட இவர் பொதுவாழ்க்கையில் ஈடுபட்டார். 1876ல் மெட்ரோபோலிட்டன் கல்லூரியில் பேராசிரியராகச் சேர்ந்தார். பானர்ஜி துவக்கிய பள்ளி பின்னர் ரிப்பன் கல்லூரியாக விரிவடைந்தது. பெங்காலி என்ற பத்திரிகையின் பதிப்பாசிரியராகப் பணியாற்றி மக்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். இவர் ஆனந்த மோகனுடன் சேர்ந்து இந்தியன் அசோஷியேஷன் என்ற அமைப்பைத் துவக்கினார். சுரேந்திரநாத் வங்காள சட்ட மன்றத்துக்கு நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டார் (1894, 1896, 1898, 1900) இவர் இரண்டு முறை காங்கிரஸ் தலைவராகப் பொறுப்பேற்றார் (1895, 1902).

வங்கப் பிரிவினை சுரேந்திரநாத் பானர்ஜியின் வாழ்க்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. அதை எதிர்த்து வங்காளி பத்திரிகையில் கடுமையாக விமரிசித்து எழுதினார். சுதேசி இயக்கத்தில் ஆர்வத்துடன் பங்கேற்றார். ஆனந்தமோகன், போசுடன் சேர்ந்து இரண்டு பிரமாண்டமான பொதுக்கூட்டங்களில் உரையாற்றினார். தேசிய இயக்கத்தின் துவக்ககாலப் போராட்டத்தில் மிகவும் அதிகமாகப் பொதுமக்கள் பங்கேற்ற கூட்டங்கள் அவை என்பது குறிப்பிடத்தக்கது.

சூரத் காங்கிரஸ் கூட்டத்தில் (1907) மிதவாதிகளுக்கும், தீவிரவாதிகளுக்குமிடையே ஏற்பட்ட மோதலின்போது வீசப்பட்ட செருப்பு மேடையில் பெரோஸ்ஷா மேத்தாவுடன் வீற்றிருந்த சுரேந்திரநாத் பானர்ஜியின்மீது விழுந்தது! சென்னையில் அன்னிபெசன்ட் அம்மையார் கைது செய்யப்பட்டபோது (1917) சுரேந்திரர் சுயாட்சி இயக்கத்தில் சேர்ந்தார். 1919-1920ல் காங்கிரஸ் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தை எதிர்த்து இவரும் சத்திரபால் டெஜ்பகதூர் சாப்ரூ, சி.சங்கரன் நாயர், ஜின்னா ஆகியோருடன் சேர்ந்து காங்கிரசைவிட்டு வெளியேறினார். இந்தியன் லிபரல் பெடரேஷன் என்ற அமைப்பைத் துவக்கினார்.

சுரேந்திரநாத் பானர்ஜி, கோகலே, மாளவியா போன்று காங்கிரஸ் மிதவாதியாவார். ஆங்கில அரசாங்கத்தை அகற்றாமல் இந்தியர் நலனுக்காக நிர்வாகத்தைச் சீர்திருத்த வேண்டும் என்று விரும்பினார். வங்கப் பிரிவினையும், சுதேசி இயக்கமும், சுயாட்சிப் போராட்டமும், சுரேந்திரரின் நோக்கிலும் போக்கிலும் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தின. இத்தாலியின் விடுதலைப் போராட்ட வீரர் மாஜினியின் வாழ்க்கையாலும் வாக்காலும் கவரப்பட்ட இவர் 'வங்காள அமைதியின்மையின் தந்தை' (Father of Unrest in Bengal) என்று அறியப்பட்டார்.

சுரேந்திரர் ஒரு தேசிய வரலாற்று விவேகி. இவர் காலனி ஆதிக்கத்தின் சுரண்டல்தன்மையை மையப்படுத்தி சிந்தித்தவர்; செயல்பட்டவர். தேசிய உணர்ச்சியின் வெளிப்பாடே தேசிய இயக்கம் என்று கருதியவர். தேசிய இயக்கம் மக்கள் இயக்கமாக மலர வேண்டும் என்று எதிர்பார்த்தார். நௌரோஜி, திலகர் போன்றே இந்தியரது ஒற்றுமையே இந்திய தேசத்தின் இதயம் என்று எண்ணியவர். இந்தியா ஒரு தேசமாக உருவெடுத்து வருவதைக் கண்டவர்.

சுரேந்திரநாத் பத்திரிகையைப் பிரச்சாரக் கருவியாகப் பயன்படுத்தினார். அவர் நடத்திய பெங்காலி பத்திரிகை மூலம் பொருளாதார சுதந்திரத்தின் முக்கியத்துவம்பற்றி எழுதினார். அரசியல் சுதந்திரம் தற்காலிகமானது; பொருளாதார சுதந்திரமே நிலையானது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டினார். அரசியல் உரிமைகளைக் கோருவதற்காக தேசியவாதிகள் ஒன்று சேரலாம்; ஆனால் இந்த உரிமைகளைப் பெற்றவுடன் அந்த ஒற்றுமை மறைந்துவிடும்; பொருளாதார உரிமைகளுக்காக ஒன்று சேர்வதே நீடித்து நிற்கும் என்று தேசிய தீர்க்கதரிசனத்துடன் சுரேந்திரநாத் தெளிவுபடுத்தினார். இவர் பத்திரிகைச் சுதந்திரத்துக்காகப் போராடினார். சுரேந்திரநாத் பத்திரிகை ஆசிரியராக, நீதிமன்றக் குற்றத்துக்காக இந்தியாவில் முதல்முறையாகச் சிறை சென்றார். திலகரோடு கருத்து மாறுபாடு கொண்ட இவர் 1897 அம்ரோட்டி காங்கிரஸ் கூட்டத்தில் திலகரை நினைவுகூர்ந்து அவர் பெற்ற தண்டனைக்காக 'நாடே கண்ணீர் வடித்தது' என்று கூறியபோது அவையோர் அனைவரும் எழுந்துநின்று கரவொலி எழுப்பினர்.

சுரேந்திரநாத் பானர்ஜி சிறந்த பேச்சாளர். இவரது சட்டமன்றப் பேச்சுகள் அதிகார வர்க்கத்தின் குறைபாடுகள்; அரசாங்கக் கொள்கையில் குறுகிய நோக்கம், பொதுநீதி, நிர்வாகச் சீர்கேடு ஆகியவற்றை அம்பலப்படுத்தின; தூங்கிக்கிடந்த சட்டமன்றம் துள்ளி எழுந்தது. இவர் 'கேட்டார்ப் பிணிக்குந் தகைய வாய்க் கேளாரும் மொழிவதாம்' சொல்வல்லன். கிரேக்கத்துக்கு டெமாஸ்தனஸ், இத்தாலிக்கு சிசிரோ, இந்தியாவுக்கு சுரேந்திரநாத் பானர்ஜி.

**பிபின் சந்திர பால், 1858-1932**

பிபின் சந்திர பால் அஸ்ஸாம் சில்ஹெட் மாவட்டத்தில் பிறந்தார். ஆசிரியராக வாழ்க்கையைத் துவங்கிய இவர் தனது அறிவாற்றலாலும், நாவன்மையாலும், எழுத்துத் திறமையாலும், தேசத் தலைவரானார். பிபின் சந்திரர் 1887ல் சென்னையில் கூடிய காங்கிரஸ் மாநாட்டின்போது தேசிய இயக்கத்தில் சேர்ந்தார். 1903ல் முதன்முதலாக இந்திய அரசியலில் தீவிரவாதக் குரல் தெளிவாகக் கேட்டபோது பிபின் சந்திரர் 'நியூ இந்தியா' என்று அவர் பதிப்பித்து வெளியிட்டு வந்த வார இதழில் அக்குரலைப் பிரதிபலித்தார்.

மிதவாதிகளின் 'அரசியல் யாசகப்' போராட்ட உத்தியைக் கண்டித்து எழுதினார். பால கங்காதர திலகர், லாலா லஜபதிராய், பிபின் சந்திர பால் (Bal-Lal-Pal) ஆகிய மூவரும் தீவிரவாத மும்மூர்த்திகளாகத் திகழ்ந்தனர்.

பால் சுதேசி இயக்கத்தில் தீவிர பங்கேற்றார். 1903 டிசம்பர் மாதம் வங்கப் பிரிவினைத் திட்டம்பற்றித் தெரிந்த உடனேயே எதிர்ப்பு கிளம்பியது. பின்னர் 1905 ஜூலை 19ம் நாள் வங்கப் பிரிவினை முறையாக அறிவிக்கப்பட்டபோது அந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்ட இயக்கமாக உருவெடுத்தது. பிபின் சந்திரர் சுதேசி இயக்கத்தை அகில இந்திய இயக்கமாக விரிவுபடுத்த விரும்பினார். சுதேசி, விதேசிப்பொருள் புறக்கணிப்பு போன்ற போராட்ட உத்திகள் இந்திய விடுதலைக்கான வழிகளாக, முறைகளாக மாற வேண்டும், மக்கள் இயக்கமாக மலர வேண்டும் என்று வாதிட்டார். பின்னர் பிபின் சந்திரர் அரவிந்தரைப் போன்று அரசியலிலிருந்து விலகிக் கொண்டார்!

பிபின் சந்திரர் அரசியலைவிட்டு விலகினாரேயன்றி காங்கிரசைவிட்டு வெளியேறவில்லை. 1911ல் இவர் பிரிட்டன், அயர்லாந்து, எகிப்து, இந்தியா உள்ளிட்ட டொமினியன்கள் சேர்ந்து 'இம்பீரியல் பெடரேஷன்' (Imperial Federation) என்ற கூட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தைக் கூறினார். பிரிட்டனுக்கும், இந்தியாவுக்கும் இடையேயான தொடர்பு ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் உள்ள உறவாக இல்லாமல் சமசுதந்திர நாடுகளுக்கிடையேயான நட்பாக இருக்க வேண்டும் என்றார்.

1917-18ல் ரஷ்யாவில் ஏற்பட்ட மக்கள் புரட்சி பிபின் சந்திர பாலின்மீது பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது. இப்புரட்சியை எதேச்சதிகாரத்தின் வீழ்ச்சியாகக் கருதினார் பால். அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்ட மக்கள் புதிய சக்தியாக உருவெடுக்க வேண்டும், மேல்வகுப்பாரின் கரண்டலிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக வாழ வேண்டும், சமத்துவ சமுதாயம் அமைய வேண்டும் என்ற கருத்துக்களைப் பற்றிப் பேசினார், எழுதினார். 1919-1920ல் காந்தி துவங்கிய சாத்வீகப் போராட்டத்தை எதிர்த்து இவர் காங்கிரசைவிட்டு வெளியேறினார்.

சிந்தனையாளர் பால் அந்நிய மூலதனம் ஆபத்தானது; வறுமைக்கான வழி; இந்தியரது வாழ்க்கையையோ, வளத்தையோ பெருக்காது; பொருளாதார வளர்ச்சியை முடக்கிவிடும் என்று எச்சரித்தார். ஜி.சுப்பிரமணிய ஐயரைப் போன்றே இவரும் வலிமைமிக்க முதலாளிகளிடமிருந்து எளியோரான தொழிலாளிகளைக் காப்பாற்ற வேண்டும் என்று குரல் எழுப்பினார், பேனாவைப் போர் வாளாகப் பயன்படுத்தினார். 'நியூ இந்தியா', 'வந்தே மாதரம்' பத்திரிகைகளில் எழுச்சிக் கட்டுரைகள் எழுதினார். பிபின் சந்திரபால் 'மாபெரும் தேசிய தீர்க்கத்தரிசிகளில் ஒருவர்' என்று புகழாரம் சூட்டினார் அரவிந்தர்.

# 14. முஸ்லீம் லீக், 1906

> இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சி அகன்றுவிட்டால் இந்துக்கள், முஸ்லீம்கள்மீது ஆதிக்கம் செலுத்துவர்; நமது உயிருக்கும் உடைமைக்கும் மானத்துக்கும் அபாயம் உண்டாகும்.
>
> \- விகுர்-உல்-ஹல்க்.

**தேக்கமுற்ற சிறுபான்மையினர்**

ஆறு நூற்றாண்டுகளாக இந்தியாவை ஆட்சிசெய்த பரம்பரையினரின் வழித்தோன்றல்களே முஸ்லீம்கள். அவுரங்க சீப்புக்குப் பின்னர் முகலாயப் பேரரசு சிதறிப் போயிற்று. முகலாயர்களது இடத்தை ஆங்கிலேயர்கள் கைப்பற்றியபோது முஸ்லீம்கள் ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்தனர். அந்த எதிர்ப்பு 1857 கிளர்ச்சியின்போது தீவிரமாக வெளிப்பட்டது. அக்கிளர்ச்சி அடக்கப்பட்டவுடன் ஆங்கிலேய அரசு முஸ்லீம்களைப் பழி வாங்கிற்று. முஸ்லீம்கள் பாகுபாடு செய்யப்பட்டனர். அவர்கள் இராணுவத்திலிருந்தும் அரசுத் துறைகளிலிருந்தும் ஒதுக்கி வைக்கப்பட்டனர். அதன் காரணமாக முஸ்லீம்கள் பொருளாதாரத்திலும் கல்வியிலும் மிகவும் பின்தங்கிப் போயினர். தேசிய நீரோட்டத்திலிருந்து விலக்கப்பட்ட அவர்கள் தனித்தீவாக இருந்து தேக்கமுற்றனர்.

**தூண்டப்பட்ட சிறுபான்மையினர்**

முஸ்லீம்களின் இந்தத் தேக்கநிலை நெடுநாள் நீடிக்கவில்லை. அவர்களுடைய நிலையில் மாற்றமேற்படத் துவங்கியது. சர் வில்லியம் ஹண்டர் (Sir William Hunder) என்பவர் எழுதிய இந்திய முஸல்மான்கள் (1871) என்ற நூலில் இந்திய முஸ்லீம்களின் அவல நிலையைப் பற்றியும் அவர்களது முன்னேற்றத்தில் அரசு காட்டவேண்டிய அக்கறையின் இன்றியமையாமை பற்றியும் விரிவாக எழுதினார். ஹண்டரின் கருத்துக்கள் அரசாங்கத்தின் கவனத்தைக் கவர்ந்தது. முஸ்லீம்களின் முன்னேற்றத்துக்கான சூழ்நிலை உருவாயிற்று. அதை நன்கு பயன்படுத்திக் கொண்டவர் சையத் அகமதுகான் (Syed Ahmed Khan ) ஆவார். அவர் அலிகாரில் முகமதிய ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரி ( Mohammedan Anglo-Oriental College) யை நிறுவினார். அதன்மூலம் முஸ்லீம்களுக்கு இஸ்லாமைப் பற்றிய அறிவோடு, ஆங்கிலேயக் கல்வியும் அளிக்கப்பட்டது. ஆங்கிலேயர்கள் அக்கல்லூரியை அக்கறையோடு ஆதரித்தனர். அலிகார் கல்லூரி முஸ்லீம் அரசியலுக்கும் 'அலிகார் இயக்கத்'துக்கும் மையமாகத் திகழ்ந்தது.

சையத் அகமதால் ஊக்குவிக்கப்பட்ட அலிகார் முஸ்லீம்கள், முஸ்லீம் கல்வி காங்கிரஸ் (Muslim Educational Congress) என்ற அமைப்பை

ஏற்படுத்தினர். அதுவே பின்னர் 'முஸ்லீம் கல்வி மாநாடு' (Muslim Educational Conference) என்று அழைக்கப்பட்டது. இது இந்திய தேசியக் காங்கிரசின் சரி நேர் அமைப்பாகும். முஸ்லீம் லீக் அமைக்கப்படுவதற்கு முன்பு இதுதான் முஸ்லீம்களின் நலனுக்காகப் பாடுபட்டது. காங்கிரஸ் கூடும் போதெல்லாம் முஸ்லீம் கல்வி மாநாடும் கூடுவது வழக்கமாயிற்று! இதுவன்றி 1888 ஆகஸ்டு மாதம் சையத் அகமது அலிகாரில் 'ஐக்கிய இந்திய நாட்டுப் பற்றுடையோர் சங்கம்' ( United Indian Patriotic Association ) என்ற அமைப்பையும் ஏற்படுத்தினார். சட்ட மன்றங்களிலும், உள்ளாட்சி நிறுவனங்களிலும் முஸ்லீம்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்றும், இந்நிறுவனங்களுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்குப் பிரத்தியேகமாக முஸ்லீம் தனித்தொகுதிகள் வேண்டும் என்றும் கோரினார் சையத் அகமது. எனவே முஸ்லீம் லீக் துவக்கப்படுவதற்கு முன்னரே முஸ்லீம் பிரிவினை வாதத்துக்குரிய விதை விதைக்கப்பட்டது.

**வங்கப் பிரிவினையும் முஸ்லீம்களும்**

வங்கப் பிரிவினைத் திட்டம் அறிவிக்கப்பட்டபோது (1905) வங்காள முஸ்லீம்கள் அதில் ஆர்வம் காட்டவில்லை. முஸ்லீம் தலைவர்கள் இந்துத் தலைவர்களுடன் இணைந்து வங்கப் பிரிவினையை எதிர்த்தனர். ஆனால் கர்சன் பிரபு முஸ்லீம் பெரும்பான்மையினரைக் கொண்ட தனிகிழக்கு வங்காள மாநிலம் பிரிவதால் முஸ்லீம்களுக்கேற்படும் நன்மைகளை எடுத்துக்கூறி, முஸ்லீம் இன உணர்வைத் தூண்டிவிட்டு வங்கப் பிரிவினைக்கு ஆதரவாக வங்காள முஸ்லீம்களைத் திசை திருப்பினார். அதில் வெற்றியும் பெற்றார். டாக்காவிலிருந்த முஸ்லீம் நிலச்சுவான்தார்களும், கற்றோரும், அரசாங்கப் பதவிகளில் இருந்தோரும் வங்கப் பிரிவினையை ஆதரித்தனர். கிழக்கு வங்காள அஸ்ஸாமின் லெப்டினண்ட் கவர்னராயிருந்த பி.புல்லர் ( Bampfylde Fuller ) வங்கப் பிரிவினையை எதிர்த்த இந்துக்களை அடக்கி, பிரிவினையை ஆதரித்த முஸ்லீம்களை ஊக்குவித்து, இந்து முஸ்லீம் இன சச்சரவுக்கு உரமூட்டினார். முஸ்லீம் பெரும்பான்மையினரைக் கொண்ட தனி கிழக்கு வங்காள மாநிலம் உருவாக்கப்பட்டது.

**சிம்லா தூதுக்குழு**

1906 ஆம் ஆண்டு இந்திய விவகாரச் செயலர் மார்லி பிரபு இந்திய சட்டமன்றங்கள் சீர்திருத்தப்படப் போவதைப்பற்றி அறிவித்தார். அந்த அறிவிப்பு காங்கிரசின் பக்களாட்சி கோரிக்கைக்குக் கொடுக்கப்பட்ட சலுகையென முஸ்லீம் தலைவர்கள் கருதினார்கள். முஸ்லீம்களுக்குப் போதிய சட்டப் பாதுகாப்பு அளிக்கப்படாவிடில் இந்துக்கள் பெரும்பான்மையினராயுள்ள சமுதாயத்தில் முஸ்லீம்களுக்கு நீதி கிடைக்காது என்று அவர்கள் அஞ்சினர். எனவே சையத் அகமது கான் முன்பு கோரிய பிரத்யேகப் பிரதிநிதித்துவத்தை மீண்டும் வலியுறுத்தத் துவங்கினர். முஸ்லீம் தலைவர்கள், ஆகாகான் ( His Holiness Agakhan ) தலைமையில் செல்வாக்குமிக்க முஸ்லீம் தலைவர்களின் தூதுக்குழுவொன்று இந்திய வைசிராய் மார்லி பிரபுவை சிம்லாவில் சந்தித்து பின்வரும் கோரிக்கைகளை அவரது பரிசீலனைக்கு வைத்தனர்.

1. தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்படும் நிறுவனங்களின் முக்கியத்துவத்துக்கேற்ப அவைகளில் முஸ்லீம்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படல் வேண்டும். அவர்களது எண்ணிக்கைக்கேற்ப அல்ல;

2. முஸ்லீம்களுக்கென தனித்தொகுதிகளை ஏற்படுத்துதல்;

3. அரசாங்கப் பணிகளில் முஸ்லீம்களுக்கெனப் போதிய இட ஒதுக்கீடு செய்தல்;

4. புதிதாக முஸ்லீம் பல்கலைக் கழகங்களை ஏற்படுத்தப்போதிய நிதியை அரசாங்கம் தருதல்;

5. வைசிராயின் ஆட்சிக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கையில் முஸ்லீம்களுக்கு முன்னுரிமை தர வேண்டும். முஸ்லீம் தூதுக் குழுவினரின் கோரிக்கைக்கு மிண்டோபிரபு உற்சாகமான வரவேற்பும் நம்பிக்கையும் கொடுத்தார்.

**முஸ்லீம் லீக்**

இந்திய வைசிராயைச் சந்தித்த தூதுக் குழுவினரில் ஒருவரான நவாப் சலிமுல்லா ( Nawab Salimullah ) ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டார் (நவ.6). அதில் அவர் அகில இந்திய முஸ்லீம் மாநாடு ( All India Muslim Conference) அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியிருந்தார். இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து முஸ்லீம் பிரதிநிதிகள் டாக்காவில் கூடி சலிமுல்லா கூறிய யோசனையைப் பரிசீலித்தனர். அதன்விளைவாக அகில இந்திய முஸ்லீம் லீக் (All India Muslim League) 1906 டிசம்பர் 30ஆம் நாள் துவக்கப்பட்டது. முஸ்லீம் லீக்கின் நோக்கங்களாவன:

1. முஸ்லீம்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு விசுவாசமாக இருக்குமாறு ஊக்குவித்தல்;

2. முஸ்லீம்களின் தேவைகளையும் விருப்பங்களையும் அரசாங்கத்துக்கு எடுத்துக்கூறல்;

3. முஸ்லீம்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்;

4. முஸ்லீம்களுக்கும் பிற சமுதாயத்தினருக்குமிடையே நட்புறவை வளர்த்தல்;

முஸ்லீம் லீகின் முதல் மாநாடு அமிர்தசரசில் கூடிற்று (1907). சர் சையது அலி இமாம் அதற்குத் தலைமை தாங்கினார். லீக்கின் அரசியல் அமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது. துவக்கத்தில் 400 உறுப்பினர்களே லீக்கில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. சட்டமன்றங்களிலும் அரசாங்கப் பணிகளிலும் முஸ்லீம்களுக்கு இட ஒதுக்கீடு, வைசிராயின் ஆட்சிக் குழுவில் பெரும்பான்மை சமூகத்துக்குச் சமமான இடங்கள் முஸ்லீம்களுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை அம்மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்கள் வற்புறுத்தினர். ஆகாகான் முஸ்லீம் லீக்கின் நிரந்தரத்

தலைவர் என்று அறிவிக்கப்பட்டது. லீக்கின் கிளைகள் பிற மாநிலங்களில் துவக்கப்பட்டன. இலண்டனிலும் அதன் கிளை துவக்கப்பட்டது. 1909ஆம் ஆண்டின் கவுன்சில் சட்டம் முஸ்லீம்களுக்குத் தனியான தேர்தல் பிரதிநிதித்துவம் வழங்கியதும் முஸ்லீம் லீக்கின் முதல் வெற்றியாகக் கருதப்பட்டது.

**தேசிய முஸ்லீம்கள்**

இந்திய முஸ்லீம் தலைவர்கள் அனைவரும் முஸ்லீம் லீக்கை ஆதரிக்கவில்லை. அவர்கள் தேசிய முஸ்லீம்கள் (Nationalist Muslims) என்றழைக்கப்பட்டனர். உதாரணமாக முகமது அலி ஜின்னா லீக்கில் சேரவில்லை. இந்து முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்திய அவர் முஸ்லீம்களுக்குப் பிரத்யேகப் பிரதிநிதித்துவம் என்ற லீக்கின் கோரிக்கையைக் கடுமையாக எதிர்த்தார். நவாப் சையது முகமது. மவுலானா ஷிப்லி நைலிமாணி, மவுலானா முகமது அலி, மவுலானா அபுல்கலாம் ஆசாத், சையத் வாஸிர், ஹாஸன் இமாம், ஹகிம் அஜ்மல் கான் ஆகியோர் முஸ்லீம் லீக்கில் சேராத பிரபல முஸ்லீம் தலைவர்களாவர். அதுமட்டுமல்ல; ஜமைத் உல்லாமா ஹிந்த் ( Jamit-ululema Hind ) என்ற ஒரு போட்டி அமைப்பை ஏற்படுத்தி அதன்மூலம் முஸ்லீம்களைக் காங்கிரசில் சேர்க்க முயற்சிக்கப்பட்டது.

**முஸ்லீம் லீக்கும் காங்கிரசும்**

முஸ்லீம் லீக் துவக்கப்பட்டபோது அது காங்கிரசின் அரசியல் விரோத அமைப்பாகவே காட்சியளித்தது. ஆனால் விரைவில் தனது போக்கை மாற்றிக்கொண்டது லீக். அரசாங்கம் வங்கப் பிரிவினையை வாபஸ் வாங்கியது (1911) முஸ்லீம் லீக்குக்குப் பேரிடியாக இருந்தது. அதோடு தேசிய முஸ்லீம் தலைவர்களின் செல்வாக்கு, ஜமைத் உல்லாமா ஹிந்தின் நடவடிக்கைகள் ஆகியவை முஸ்லீம் லீக்கின் நோக்கிலும், போக்கிலும் மாற்றத்தை ஏற்படுத்தின. லீக்கின் அரசியல் அமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டன (1913). தன்னாட்சியே இந்தியாவின் குறிக்கோள் என்பதை லீக் ஏற்றுக் கொண்டது. அதையே கராச்சி காங்கிரஸ் (1913) திரும்ப வலியுறுத்தியது. துருக்கி, இத்தாலிய போரிலும் பால்கன் போரிலும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் போக்கில் அதிருப்தியடைந்த லீக் முஸ்லீம்கள் காங்கிரசுடன் மேலும் நெருக்கமாக வந்தனர். 1916ல் லக்னோ காங்கிரசில் செய்து கொள்ளப்பட்ட காங்கிரஸ்-லீக் உடன்பாட்டில் அவ்விரு அமைப்புக்களுக்கிடையேயான இணக்கம் மேலும் அதிகரித்தது. மூன்றாண்டுகளுக்குப் பின் (1919) ஒத்துழையாமை இயக்கம் துவக்கப்பட்டபோது இந்து-முஸ்லீம் ஒற்றுமை அதன் உச்சகட்டத்தை எட்டியது.

**பிரிட்டிஷாரின் பொறுப்பு?**

முஸ்லீம் லீக் அமைக்கப்பட்டது பிரிட்டிஷாரின் பிரித்தாளும் கொள்கை (Divide et Impera)க்குக் கிடைத்த முதல் வெற்றி என்று கூறப்படுகிறது. அப்படிக் கூறப்படுவதற்குக் காரணம் அலிகார் கல்லூரியின் முதல்வராக இருந்த

ஆர்ச்பால்ட் ( Archbald ) என்பவரும் வைசிராய் மின்டோ பிரபுவின் அந்தரங்கச் செயலராயிருந்த டன்லப் ஸ்மித் ( Dunlop Smith ) என்பவரும் எடுத்துக் கொண்ட முயற்சியால்தான் ஆகாகான் தலைமையில் முஸ்லீம் தலைவர்களின் தூதுக்குழு வைசிராயை சிம்லாவில் சந்தித்துப் பேசினர். வைசிராய் தூதுக் குழுவின் கோரிக்கைகளுக்கு ஆதரவாக இருந்தார்; அறுபத்து இரண்டு மில்லியன் முஸ்லீம்கள் அரசதுரோக இந்துக்களிடமிருந்து பிரிக்கப்பட்டுவிடுவர் என்பதில் திருப்தியடைந்தனர் எனவும் கருதப்படுகிறது.

இதற்கு மாறாக, பிரிட்டிஷாரின் தூண்டுதலால் முஸ்லீம் லீக் தோற்றுவிக்கப்படவில்லை என்று கூறுவோருமுண்டு. இந்து முஸ்லீம்களிடையே நிலவிய அடிப்படையான கலாச்சார, சமய, சமுதாய, வரலாற்று, அரசியல் வேறுபாடுகளின் விளைவே லீக்கின் தோற்றம் என்று கருதப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலேயே முஸ்லீம்களின் பிரிவினை வாதத்துக்குரிய வித்து ஆழமாக ஊன்றப்பட்டுவிட்டது. அது வேர்விட்டு துளிர்விட்டு முஸ்லிம் லீக் என்ற செடியாக வளர்ந்தது அவ்வளவே. திலகர், பிபின் சந்திர பாலர், லாலா லஜபதிராய், அரவிந்தர் ஆகியோரது தீவிர இந்து சமயச் சார்புடைமை முஸ்லீம் பிரிவினைப்போக்கை ஊக்குவித்தது. வேறுவிதமாகக் கூறவேண்டுமெனில் இந்து ஆதிக்கச் சவாலுக்கான (Challenge) சமாளிப்பே (Response) முஸ்லீம் லீக்கின் தோற்றமாகும். முஸ்லீம் லீக் தோன்றிய அதே ஆண்டு அகில இந்திய இந்து மகாசபையும் அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இயல்பாக உருவாகி இருந்த இந்து-முஸ்லீம் முரண்பாட்டையும் மாறுபாட்டையும் பிரிட்டிஷார் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனரேயன்றி அவர்கள் உருவாக்கவில்லை.

# 13. பயங்கரவாதிகள்

> ஆயுதப்புரட்சி ஒரு கருவிதான். அதற்குப் பின்னால் பொருளாதார முறையையும், அரசாங்க அதிகாரத்தையும் மாற்ற முடியும் என்ற மக்களின் மனஉறுதி உள்ளது. மனிதனை மனிதன் சுரண்டும் ஆட்சியை அகற்றி, சுயாட்சி பெறும் முழு உரிமையையும் நாம் பெற வேண்டும்.
>
> - சர்தார் பகத் சிங்.

**பயங்கரவாதிகள் யார்?**

தென்னிந்தியக் கிளர்ச்சி (1800-1801), வேலூர்க் கிளர்ச்சி (1806), உட்புற எதிர்ப்புகள் (1808-1857), பெருங்கிளர்ச்சி (1857) ஆகிய அனைத்தும் ஆங்கிலேய ஆட்சிக்கெதிரான வன்முறைக் கிளர்ச்சிகளேயாகும். அக்கிளர்ச்சிகளெல்லாம் இராணுவ வலிமையால் கொடுமையாக அடக்கப்பட்டு கிளர்ச்சிக்காரர்கள் கொடூரமாகத் தண்டிக்கப்பட்டதன் விளைவாக இந்திய இளைஞர்களது இதயங்களில் அந்நிய ஆட்சிக்கெதிரான சினத்தீ மூண்டது. மகாராஷ்டிரத்தில் ஏற்பட்ட கொள்ளைநோயும், வங்கப்பிரிவினையும் இந்திய தேசிய இயக்கத்தில் தீவிரவாதிகளைத் தலைதூக்கச் செய்தன. அதேபோன்று சுதேசி இயக்கமும், சாத்வீகப் போராட்டமும் ஒடுக்கப்பட்டமை பயங்கரவாதிகள் (Terrorists ) அல்லது புரட்சிவாதிகள் ( Revolutionaries ) விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொள்ளக் காரணமாயிருந்தது. தங்களுக்குள்ளே மாறுபட்டு முரண்பட்டாலும் மிதவாதிகளும், தீவிரவாதிகளும் வன்முறையில் ஈடுபடவில்லை. அவர்கள் காங்கிரஸ் வீட்டுக்குள்ளேயே இருந்துகொண்டு போராடிய அரசியல் பங்காளிகள்! ஆனால் பயங்கரவாதிகள் காங்கிரசுக்கு வெளியே இருந்துகொண்டு வன்முறை வழிகளில் அரசியல் கொலைகள் செய்து போராடிய தேசியவாதிகள்.

**நோக்கம்**

பயங்கரவாதிகளின் நோக்கம் இந்தியாவைப் பிரிட்டனின் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதேயாகும். ஆங்கிலேயர்கள் இந்தியாவை வன்முறையால் ஆக்கிரமித்து வஞ்சகத்தால் அவர்களது ஆட்சியை நிலைநிறுத்தினார்கள். அந்நிய ஆட்சி இந்திய உடலில் குத்திய முள்ளாக இருந்தது. அந்த முள்ளை வன்முறையாலும் வஞ்சகத்தாலும் நீக்க நினைத்தார்கள் பயங்கரவாதிகள். ஆங்கிலேயர்களை இந்திய மண்ணிலிருந்து அகற்றினால்தான் அரசியல், பொருளாதார, சமுதாய, சமத்துவம் காண முடியும் என்று அவர்கள் நம்பினார்கள். வன்முறை தேசியத்தை மக்களிடையே வளர்த்து, இந்தியாவை அடிமைத் தளையிலிருந்து விடுவித்து, சுதந்திரம், சமத்துவம், நீதி ஆகியவற்றின்மீது நாட்டின் அமைப்பை மாற்றியமைப்பதே பயங்கரவாதிகளின் குறிக்கோளாகும்.

**வன்முறை வழி**

பயங்கரவாதிகள் 'துப்பாக்கித் தத்துவத்தில்' நம்பிக்கை கொண்டவர்கள். வன்முறை வழியைப் பின்பற்றியவர்கள் குருதி கொட்டுவதை தேசிய வழிபாடாகச் செய்தவர்கள். பயங்கரவாதிகள் நன்கு திட்டமிட்டு செயல்பட்டார்கள். இராணுவத்தில் குறுக்கிட்டு குழப்பம் விளைவித்தார்கள். 'கொரில்லாப் போரில்' ஈடுபட்டார்கள். தலைமறைவாக இயங்கினார்கள். இரகசியக் கழகங்கள் அமைத்துக் கொண்டார்கள். போர்க் கருவிகளையும், வெடி மருந்துகளையும் கள்ளக்கடத்தல் மூலம் பெற்றனர். இரக்கமற்ற ஆங்கிலேய அதிகாரிகளைக் கொலை செய்யவும், அரசாங்கச் சொத்தை அழிக்கவும், கருவூலகங்களைக் கொள்ளையடிக்கவும் அவர்கள் தயங்கவில்லை. நாட்டு விடுதலைக்காகத் தங்களது இன்னுயிரை இழக்கவும் அவர்கள் அஞ்சவில்லை. சுருங்கக்கூறின் வன்முறைக் கிளர்ச்சியை ஊக்குவித்தல், ஆட்சிக்கெதிராக கிளர்ந்தெழல், அரசியல் கொலை, கொரில்லாப் போர், அரசாங்கச் சொத்தை அழித்தல், அரசாங்கக் கவிழ்ப்பு ஆகியவையே பயங்கரவாதிகள் பின்பற்றிய வன்முறை வழிகளாகும்.

**அரசியல் கொலைகள்**

ஆங்கிலேய ஆட்சியாளர்களை அச்சுறுத்துவதற்காகப் பயங்கரவாதிகள் அரசியல் கொலை முயற்சிகளை மேற்கொண்டனர். 'அரசியல் கொலைகள்' (Political Murders) செய்ய முயன்றனர். வங்காள லெப்டினண்ட் கவர்னர் சர் ஆண்ரு பிரேசர் (Sir Andrew Fraser ) பயணம் செய்த புகை வண்டியை வெடிகுண்டு வைத்துத் தகர்ப்பதற்கான முயற்சி செய்யப்பட்டது (1907 டிச. 6) டாக்கா மாவட்ட மாஜிஸ்ட்ரேட் பி.சி. ஆலன் (B.C. Allen) கைத் துப்பாக்கியால் சுடப்பட்டு படுகாயமடைந்தார் (டிச.23). வங்காள ராஜதானி மாஜிஸ்ட்ரேட் கிங்ஸ் போர்டை (Kings Ford)ஐக் கொலை செய்வதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடு தவறுதலாக ஆங்கில வழக்கறிஞர் பிங்லே கென்னடி ( Pingle Kennady) அவரது மனைவி, மகள் ஆகியோர் இறப்பதற்கு காரணமாயிற்று (1908 ஏப்ரல் 30). புகைவண்டித் தகர்ப்பு முயற்சியிலிருந்து தப்பிய சர் ஆண்ரு பிரேசரை ஜீதேந்திர நாத் ராய் சௌத்திரி ( Jitendra Nath Rai Chowdary ) என்ற மாணவன் கொடூரமாகத் தாக்கினான் (நவம்பர்). கணேஷ் சவார்கர் ( Ganesh Savarkar) கைது செய்யப்படக் காரணமாக இருந்த சர்.டபிள்யூ. கர்சன் வில்லி (Sir W.Curzon Wyllie ) ஐ இந்திய பயங்கரவாதி மதன் லால் திங்ரா ( Madan Lal Dhingra ) இலண்டனில் கொலை செய்தார் (1901 ஜூலை 1). இந்திய வைசிராய் மிண்டோ பிரபு (Lord Minto)வும் அவரது மனைவியும் அகமதாபாத்தில் கோச்சு வண்டியில் சென்று கொண்டிருந்தபோது அவர்கள்மீது 'தேங்காய் குண்டுகள்' வீசப்பட்டன (நவ 9). நாசிர் கலெக்டர் ஜாக்சன் (Jackson) ஒரு பிராமண இளைஞனால் சுட்டுக் கொல்லப்பட்டார் (டிசம்பர்). அதே மாதம் அம்பாலா துணைக் கமிஷனருக்கு ஒரு வெடிகுண்டு பார்சல் அனுப்பப்பட்டது.

வங்காளக் குற்றத்துறை மாவட்டத் துணைப் போலீஸ் அதிகாரியாயிருந்த கான்பகதூர் ஷம்சுல் ஆலம் (Khan Bahadur Shamsul Alam) கல்கத்தா உயர்நீதி மன்றத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார் (1910 ஜனவரி). தமிழ்நாட்டில் மணியாச்சி சந்திப்பில் திருநெல்வேலி மாவட்டக் கலெக்டர் ஆஷ் துரையை வாஞ்சிநாதர்

ஐயர் சுட்டுக் கொன்றார் *(1911 ஜூன் 11)*. புதிய வைசிராய் ஹார்டிங் பிரபு (Lord Hardinge) இந்தியாவின் புதிய தலைநகரான டெல்லி நகரில் யானை மீதமர்ந்து நுழைந்தபோது அவர்மீது வெடிகுண்டு வீசப்பட்டது. அவரது உதவியாளர் கொல்லப்பட்டார்; வைசிராய் காயத்தோடு உயிர் பிழைத்தார். பயங்கரவாதிகளின் வன்முறை அரசியல் கொலை முயற்சிகளால் ஆங்கிலேய அதிகாரிகள் பீதியடைந்தனர்.

**இரகசிய அமைப்புகள்**

பயங்கரவாதிகள் தலைமறைவாக இருந்துகொண்டு செயல்பட்டதால் அவர்கள் பல இரகசிய அமைப்புகளை (Secret Societies) ஏற்படுத்திக்கொண்டு போராடினார்கள். இளைஞர்களிடையே வன்முறை தேசிய உணர்ச்சியை ஏற்படுத்துதல்; ஆங்கிலேய ஆட்சிக் கெதிராக வன்முறைக் கிளர்ச்சியை ஊக்கவித்து நடத்தல்; ஆயுதத் தாக்குதல்களை மேற்கொள்ளல் ஆகியவையே இந்த இரகசிய அமைப்புகளின் நோக்கங்களாகும். இந்த அமைப்புகள் குறிப்பாக வங்காளத்திலும் மகாராஷ்டிரத்திலும் தீவிரமாகச் செயல்பட்டன.

**அபிநவ பாரத சங்கம்**

வி.டி.சவார்க்கர் *(1883-1966)* **1904ம்** ஆண்டு அபிநவ பாரத சங்கத்தைத் தோற்றுவித்தார். இது மகாராஷ்டிரத்தில் பிரதான இரகசிய அமைப்பாகும். சவார்க்கரின் இளைய சகோதரர் கணேஷ் சவார்க்கர் இத்தாலி விடுதலைப் போராட்ட வீரரான மாஜினியின் சுயசரிதையின் 2000 பிரதிகள் எடுத்து மக்களிடையே விநியோகம் செய்தார். வீரசவார்க்கர் இலண்டனில் இருந்துகொண்டு தானியங்கிக் கைத்துப்பாக்கிகளை இரகசியமாக இச்சங்கத்துக்கு அனுப்பி வைத்தார். கணேஷ் சவார்க்கர்மீது சதிக்குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார். அதுவே புகழ்பெற்ற நாசிக் சதிவழக்கு ஆகும்.

குவாலியரில் இயங்கிவந்த நவபாரத் சங்கமும் வன்முறைக் கிளர்ச்சியின்மூலம் இந்திய விடுதலைக்காகப் போராடி வந்தது. அதன் 22 பிராமண உறுப்பினர்கள்மீது வழக்கு தொடரப்பட்டது; பலர் தண்டிக்கப்பட்டனர். இச்சங்கம் அபிநவ பாரத சங்கத்தோடு சேர்ந்து செயல்பட்டது. மகாராஷ்டிர மற்றும் வாங்காள இரகசிய சங்கங்களோடு தொடர்புகொண்ட அமைப்புகள் பஞ்சாப், ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், தென்னிந்தியா பகுதிகளிலும் செயல்பட்டன.

**அனுசீலன் சமிதி**

அனுசீலன் சமிதியும், யுகாந்தர் கட்சியும் வங்காளத்தின் பலம்வாய்ந்த இரகசிய அமைப்புகளாகும். அனுசீலன் சமிதியின் குறிக்கோள் 'இந்திய விமோசனம்' ஆகும். பி. மித்தரால் துவக்கப்பட்ட இச்சங்கம் டாக்காவைத் தலைமை மையமாகக் கொண்டு 500 கிளைகளுடன் செயல்பட்டது. முராரிபுகார் தோட்ட இல்லத்தில் வெடிகுண்டு மற்றும் வெடிமருந்து மையம் துவக்கப்பட்டது. இந்த சங்கத்தைச் சேர்ந்தவர்கள் புதிதாக உருவாக்கப்பட்ட மேற்கு, கிழக்கு வங்க லெப்டினண்ட் கவர்னர்களைக் கொல்லத் திட்டமிட்டனர். பிரபுல்ல சக்கியும், குதிராமும், முசாபர்பூர் தலைமை மாநில நீதிபதி கிங்ஸ்போர்டைக்

கொல்ல வெடிகுண்டை வீச, குறிதவறி கென்னடியின் மனைவியும், மகளும் கொல்லப்பட்டனர். கைது செய்யப்பட்ட பிரபுல்ல சக்கி தற்கொலை செய்து கொண்டார். குதிராம் போஸ் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார் (1908 ஏப்ரல் 30). அரவிந்தகோஷ் உள்ளிட்ட 34 பேர் மீது சதிக்குற்றம் சாட்டப்பட்டது. வழக்கு விசாரணையின்போது அரசாங்க வக்கீலும், போலீஸ் அதிகாரியும் நீதிமன்ற வளாகத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர். புரட்சியாளர்களைக் காட்டிக்கொடுத்த நரேந்திர கோசேன், கனைலால் தத்தா, சத்யன் போஸ் ஆகியோர் சிறைவளாகத்தில் கொல்லப்பட்டனர்.

**யுகாந்தர் கட்சி**

யுகாந்தர் கட்சி கல்கத்தாவை நிலைக்களனாகக் கொண்டு செயல்பட்டது. அரவிந்த கோஷின் இளைய சகோதரரான பரீந்திரகுமார் கோஷ் இக்கட்சியில் தீவிர பங்கேற்றார். ஹேமசந்திர தாஸ் இக்கட்சியின் சார்பாக மேற்கு ஐரோப்பாவிற்குச் சென்று நாடு கடத்தப்பட்ட ரஷ்யப் புரட்சியாளர்களோடு தொடர்பு கொண்டு வெடிகுண்டுகளை உற்பத்தி செய்யும் முறைகளை அறிந்து வந்தார். அதன்பின் இரகசிய சங்கங்களிடையே 'வெடிகுண்டு வழிபாடு' பரவலாயிற்று.

**பயங்கரவாதிகள் இயக்கம் நசுக்கப்படல்**

பயங்கரவாதிகள் இந்திய இராணுவத்தினரைக் கிளர்ச்சி செய்யுமாறு தூண்டினர். கல்கத்தாவிலிருந்த பஞ்சாப் படைப்பிரிவினரைக் கலகம் செய்யுமாறு ஊக்குவித்தனர். 1915ல் வட இந்தியாவின் ஐந்து இடங்களில் இராணுவக் கிளர்ச்சிக்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ராஷ்பிஹாரி போஸ் தான் அம்முயற்சியில் தீவிரமாக இருந்தார். ஆனால் அத்திட்டம் அதிகாரிகளுக்குக் காட்டிக் கொடுக்கப்பட்டதால் வெற்றி பெறவில்லை. இராணுவக் கிளர்ச்சி முயற்சியினால் கிலி பிடித்த ஆங்கிலேய அரசு பயங்கரவாதிகளின் தேசிய இயக்கத்தைக் கூண்டோடு ஒழிக்கத் தீர்மானித்தது. இரகசியச் சங்கங்களின் முக்கியத் தலைவர்களான பி.கோஷ், டி.தத், ஹேம்சந்திர தாஸ், யு.என்.பானர்ஜி, ஜே.பானர்ஜி, பி.பி.தாஸ், பி.சி.நாக், சவார்க்கர் சகோதரர்கள், வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா, வ.வே.சுப்பிரமணிய ஐய்யர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். கொடுமையாக நடத்தப்பட்டனர். இரகசிய அமைப்புகள் அனைத்தும் நசுக்கப்பட்டபோதிலும் சதிச்செயல்கள் தொடரவே செய்தன. எனினும் மக்களின் ஆதரவின்மை, நன்கு தீர்மானிக்கப்பட்ட ஒருங்கிணைந்த செயல் திட்டமின்மை, போதிய நிதி வசதியின்மை, தலைவர்கள் கைது செய்யப்பட்டமை, அரசாங்க அடக்குமுறை ஆகிய காரணங்களால் பயங்கரவாதிகளின் தேசிய இயக்கம் தோல்வியடைந்தது. அதனால் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் பயங்கரவாதிகளின் தியாகத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது.

**வெளிநாடுகளில் இந்திய விடுதலைப் போராட்டம்**

**இரகசிய சங்கங்கள்**

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்தே மிதவாதிகளும் தீவிரவாதிகளும் பயங்கரவாதிகளும் தங்களது இயக்கங்களுக்கு ஆதரவு தேடும் பொருட்டு

வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டனர். பயங்கரவாதிகள் இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, அமெரிக்கா, ஜப்பான், ரஷ்யா ஆகிய நாடுகளுக்குச் சென்று இரகசியச் சங்கங்களை அமைத்து இந்திய விடுதலை போராட்ட வெற்றிக்காகப் பாடுபட்டனர். வெளிநாடுகளில் குடியேறிய இந்தியர்கள் இதில் தீவிர பங்கேற்றனர்.

**இந்திய சுயாட்சி சங்கம்**

ஷாம்ஜி கிருஷ்ண வர்மா இலண்டனில் இந்திய சுயாட்சிக் சங்கத்தை (Society of Indian Home Rule)த் தோற்றுவித்தார் (1905). அவர் இந்திய சமூகவியலாளர் (The Indian Sociologist) என்ற பத்திரிக்கையை நடத்தினார். வர்மாவுடைய 'இந்திய இல்லம்' (Indian House) பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களின் இந்திய மாணவர்களுக்குப் புகலிடமாக இருந்ததோடன்றி பயங்கரவாதிகளின் புரட்சிமையமாகவும் பயன்பட்டது. இந்தியாவிலிருந்து மேல்படிப்புக்காக இங்கிலாந்து சென்ற வி.டி.சவார்க்கர் இந்திய இல்லத்தில் சேர்ந்து வர்மாவின் நெருங்கிய கூட்டாளியானார். வீரேந்திரநாத் சட்டோபாத்தியாயா, எஸ். ரவபாய்ராணா, மதன்லால் திங்ரா, வ.வே.சு. ஐயர் போன்றோர் பிற பிரமுகர்களாவர். இலண்டன் போலீசாரின் கெடுபிடி தாங்காமல் அவர்கள் பிரான்சுக்குச் சென்றுவிட்டனர்.

**பாரிஸ் குழு**

பிரான்சுக்குச் சென்ற இந்தியப் பயங்கரவாதிகள் 'பாரீஸ் குழு' (Paris Group) என்ற அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு செயல்பட்டனர். ரஷ்யப் புரட்சியாளர்களுடனும் இந்திய இரகசிய அமைப்புகளோடும் தொடர்பு கொண்டிருந்தனர். ஏராளமான பயங்கரவாதப் பிரசுரங்கள் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்தியப் பயங்கரவாதிகள் ஜெர்மனியிலும் சுறுசுறுப்பாக இயங்கினர். 1907ல் அவர்கள் நடத்திய சர்வதேசச் சமூகவியலாளர் மாநாட்டில் (International Sociologists Conference) காமா அம்மையாரும் (Madam R. Gama) சர்தார் சிங்ராணாவும் (Sardar Singh Rana) பாரீசிலிருந்து போய்க் கலந்து கொண்டனர். அம்மாநாட்டில்தான் இந்திய தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரையாற்றினார் காமா அம்மையார். உலகெங்குமுள்ள விடுதலை விரும்பிகள் இந்திய விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார் காமா அம்மையார். இந்திய விடுதலைக்காக நாற்பதாண்டு காலம் உழைத்தவர். பெர்லினில் இந்திய விடுதலைக் குழு (Indian Independence Committee) ஒன்றும் அமைக்கப்பட்டது. வீரேந்திரநாத் சட்டோபாத்தியாயாவும், ஹர்தயாளும் அக்குழுவின் தீவிர உறுப்பினர்களாவர். முதல் உலகப்போரின் போது இந்தியப் பயங்கரவாதிகள் இங்கிலாந்துக்கெதிராக ஜெர்மனியின் உதவியை எதிர்பார்த்தனர்; கிடைக்கவில்லை.

**கதார் இயக்கம்**

'கதார்' (Ghadar) என்றால் 'கிளர்ச்சி' என்று பொருள். கதார் இயக்கம் வடஅமெரிக்காவை நிலைக்களனாகக் கொண்டு இயங்கியது. பகவான் சிங்கும், லாலா ஹர்தயாளும் இந்த இயக்கத்தின் இரு தூண்களாவர். பகவான்சிங் ஒரு சீக்கிய மதகுரு. இவர் பஞ்சாபை விட்டுச்சென்று ஹாங்காங்கிலும் , மலாய் நாடுகளிலும் கனடாவிலும் ஆயுதக் கிளர்ச்சியின் மூலம் இந்தியாவிலிருந்து

பிரிட்டிஷ் ஆட்சியை அகற்ற வேண்டும் என்று பிரச்சாரம் செய்தார். லாலா ஹர்தயால் நாடு கடத்தப்பட்டவர். இவர் 1911 ஏப்ரல் மாதம் கலிபோர்னியா சென்று, பின்னர் ஸ்டான்போர்டு பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார். 1912 டிசம்பர் 23ம் நாள் இந்திய வைசிராய் ஹார்டிஞ் பிரபு கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி இவரை வெகுவாக ஊக்கவித்தது. அந்நிகழ்ச்சியைப் பாராட்டி 'யுகாந்தர் சர்க்குலர்' (Yugandar Circular) என்ற துண்டுப் பிரசுரம் அச்சிட்டு வெளியிட்டார்.

**ஆயுதக் கிளர்ச்சித் திட்டம்**

அமெரிக்காவின் மேற்கக் கடற்கரைப் பகுதியில் ஹர்தயால் தலைமையில் இந்தியாவுக்கு ஆதரவாக வன்முறைப் புரட்சி இயக்கம் சூடுபிடித்தது. 1913 மே மாதம் போர்ட்லாந்தில் 'இந்தி சங்கம்' (Hindi Association) துவங்கப்பட்டது. இச்சங்கத்தின் முதல் கூட்டம் கான்ஷிராம் என்பவரது இல்லத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் ஹர்தயால் தனது ஆயுதக் கிளர்ச்சித் திட்டத்தை அறிவித்தார்: 1. அமெரிக்கா அளிக்கும் சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கொண்டு பிரிட்டனுக்கு எதிராகப் போரிட வேண்டும்; 2. இந்தியா விடுதலை அடைந்தால்தான் அமெரிக்காவில் இந்தியர் சமமாக நடத்தப்படுவர்; 3. இந்தியாவின் வறுமைக்குக் காரணமான பிரிட்டிஷ் ஆட்சியை ஆயுதக் கிளர்ச்சிமூலம் அகற்ற வேண்டும்; 4. இத்திட்டத்தை இந்திய மக்களிடையேயும், இந்திய இராணுவ வீரர்களிடையேயும் பரப்பி அவர்களின் ஆதரவையும், பங்கேற்பையும் பெற வேண்டும்.

ஹர்தயாலின் ஆயுதக் கிளர்ச்சித் திட்டம் அமெரிக்காவாழ் இந்தியக் குடியேறிகளிடம் உற்சாக வரவேற்பைப் பெற்றது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு 'செயற்குழு' அமைக்கப்பட்டது. பிரச்சாரம் செய்வதற்காக 'கதார்' (The Ghadar) என்ற வாரஇதழ் துவங்கப்பட்டு, இலவசமாக விநியோகிக்கப்பட்டது. பிரான்சிஸ்கோவில் யுகாந்தர் ஆசிரமம் நிறுவப்பட்டது. இந்த நகரமே கதார் இயக்கத்தின் தலைமையகமாகத் திகழ்ந்தது. பல அமெரிக்க நகரங்களில் கதார் இயக்க விளக்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த இயக்கம் குறிப்பாக சீக்கியர்களிடையே மிகுந்த செல்வாக்கைப் பெற்றது.

**கதார் வார இதழ்**

அமெரிக்காவிலிருந்து வெளியிடப்பட்ட கதார் வாரஇதழ் வெளிநாடுகளிலிருந்து இயங்கிவந்த ஆயுதப் புரட்சி இயக்கத்தின் பிரச்சார பீரங்கியாகப் பயன்பட்டது. 1919 நவம்பர் முதல் தேதி கதார் இதழ் உருது மொழியிலும் டிசம்பர் 9ம் நாள் குர்முகியிலும் வெளியிடப்பட்டது. பிரிட்டிஷ் இந்திய ஆட்சியை விரோதியாகக் கருதி,அதன் அடக்குமுறையை அம்பலப்படுத்தி அந்த ஆட்சியை அகற்றுவதே கதார் இதழின் தலையாய நோக்கமாக இருந்தது. பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளைத் தொகுத்து ஒவ்வொரு இதழிலும் வெளியிட்டது.

கதார் இதழ் வடஅமெரிக்காவில் வாழ்ந்த இந்தியர்கள் மட்டுமல்லாது பிலிப்பைன்ஸ், ஹாங்காங், சீனா, மலாய் நாடுகள், சிங்கப்பூர், டிரினிடாட், ஹோண்டுராஸ் மற்றும் இந்தியாவிலிருந்து இயங்கிய புரட்சியாளர்களைச்

சென்றடைந்தது. இவர்களிடம் ஆயுதக் கிளர்ச்சியின் மூலம் இந்தியாவிலிருந்து அந்நிய ஆட்சியை அகற்றிவிட முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. குறிப்பாக பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு விசுவாசமாக இருந்த சீக்கிய இராணுவ வீரர்களை அரசாங்க விரோதிகளாக மாற்ற உதவியது. இந்தியாவை விரைவில் விடுவிக்கும் உத்வேகத்தை இளைஞர்களிடையே உருவாக்கியது. ஆயுதக் கிளர்ச்சியின் குவிமையமாக இருந்த ஹர்தயால் 1914 மார்ச் 25ம் நாள் கைது செய்யப்பட்டு பின்னர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். அவர் அமெரிக்காவை விட்டு வெளியேறினார்!

**காமகட்டாமாறு நிகழ்ச்சி**

காமகட்டாமாறு (Komagatamaru) என்ற பெயருடைய கப்பல் இந்தியக் குடியேறிகளை ஏற்றிக்கொண்டு 1914 மார்ச் மாதம் கட்டாமாறு வான்கூவர் துறைமுகத்தை அடைந்தது. குருதித் சிங் (Gurdit Singh) என்ற சிங்கப்பூரில் வாழ்ந்த இந்திய ஒப்பந்தக்காரர் கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இருந்த இந்தியர்களை ஒன்றுதிரட்டி வான்கூவருக்கு அனுப்பவதற்காக இக்கப்பலை ஒப்பந்தம் செய்தார்.

376 இந்தியப் பயணிகளுடன் சென்ற காமகட்டாமாறு வான்கூவர் துறைமுகத்தை அடையக் கனடா அரசாங்கம் தடை செய்தது. அந்நிகழ்ச்சி கனடா வாழ் இந்தியரிடையே பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியது. இந்தியப் பயணிகளின் உரிமைக்காகப் பல கண்டனக் கூட்டங்கள் போடப்பட்டன. நிதி திரட்டப்பட்டது. அமெரிக்கா வாழ் இந்தியர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராகப் போராடத் தயாராக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். இதன் விளைவாக இந்தியாவில் ஆயுதக்கிளர்ச்சி பரவக்கூடிய ஆபத்து ஏற்பட்டது. எனவே காமகட்டாமாறு வான்கூவர் துறைமுகத்தை விட்டு வெளியேற்றப்பட்டது.

வான்கூவர் துறைமுகத்தைவிட்டு வெளியேற்றப்பட்ட காமகட்டாமாறு கல்கத்தாவை அடுத்த பட்ஜ் பட்ஜ் (Budge Budge) என்ற இடத்தை அடைந்தபோது பயணிகளுக்கும் காவல் படையினருக்குமிடையே மோதல் ஏற்பட்டது. அதில் 18 பயணிகள் கொல்லப்பட்டனர்; 202 பேர் கைது செய்யப்பட்டனர்; எஞ்சியோர் தப்பிச் சென்றனர். இதற்கிடையே முதல் உலகப்போர் துவங்கிவிட்டதால் ஆயுதப் புரட்சியாளர்கள் புதுத்திட்டம் தீட்டினர்.

**கிளர்ச்சியின் வீழ்ச்சி**

கதார் இயக்கத் தலைவர்கள் இந்தியாவுக்குத் திரும்பி இந்திய இராணுவ வீரர்களின் துணைகொண்டு பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக ஆயுதப்புரட்சி செய்யத் திட்டமிட்டனர். அதன்படி வெளிநாடுகளில் வாழ்ந்த இந்தியப் புரட்சியாளர்கள் தாய்நாடு திரும்பலாயினர். இத்திட்டத்தை முன்கூட்டியே அறிந்த இந்திய அரசாங்கம் இந்தியா திரும்பியோரை விழிப்புடன் கண்காணித்தது. பஞ்சாபுக்குள் நுழைந்த புரட்சியாளர்களுக்கு எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கவில்லை. அந்த இக்கட்டான கட்டத்தில் வங்காளப் புரட்சியாளர் ராஷ் பிகாரி போஸ், பஞ்சாபுக்கு வந்த கதார் இயக்கத்துக்குத் தலைமை தாங்க முன்வந்தார் (1915 ஜனவரி).

இவர்தான் பின்னர் சுபாஷ் சந்திரபோசுக்கு இந்திய தேசிய இராணுவத்தின் தளபதிப் பொறுப்பைக் கொடுத்தவர்.

ராஷ் பிகாரிபோஸ் ஆயுதக் கிளர்ச்சிக்காக கதார் இயக்கத்துக்கு அமைப்பு வடிவம் கொடுத்தார். அவர்கள் பல பகுதிகளிலிருந்து இராணுவ முகாம்களுடன் தொடர்பு கொண்டார். *1915* பிப்ரவரி *19*ம் நாள் ஆயுதக் கிளர்ச்சி செய்யத் திட்டமிட்டிருந்தார். ஒற்றர்மூலம் தகவல் அறிந்த காலனி அரசாங்கம் பல கதார் இயக்கத் தலைவர்களைக் கைது செய்தது. பிகாரிபோஸ் தப்பிவிட்டார். சதிக்குற்றத்துக்காக 45 கிளர்ச்சிக்காரர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. 200 பேருக்கு சிறை தண்டனை கொடுக்கப்பட்டது. கதார் கிளர்ச்சி வீழ்ச்சியடைந்தது.

**மதிப்பீடு**

கதார் இயக்கம் ஒடுக்கப்பட்டாலும் அது இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. இதற்குப் பல காரணங்கள் உண்டு : 1. கதார் வார இதழ்மூலம் பிரிட்டிஷ் ஆட்சி விரைவில் அகற்றப்பட வேண்டியதன் இன்றியமையாமையைப் படித்தோரும், பாமரரும் உணர்ந்தனர் 2. பெரும்பான்மையான கதார் இயக்கத் தலைவர்களும் தொண்டர்களும் சீக்கியர்களாக இருந்தபோதிலும் இயக்கத்தின் நோக்கும் போக்கும், இலக்கும் சமயச்சாயம் பூசப்படாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது 3. நாட்டுப்பற்றுடன் 'வந்தே மாதரம்' சொல்லி வணக்கம் செய்யும் பழக்கத்தை இயக்கத்தினரிடையே உருவாக்கியது. 4. இயக்கத்தினர் அனைவரும் இந்தியர்களாக, இந்திய விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்தனர், செய்யத்தயாராக இருந்தனர். 5.இவர்கள் ஆயுதப் புரட்சி செய்யத் திட்டமிட்டிருந்தாலும் சுதந்திர இந்தியா ஜனநாயக நாடாகத் திகழவேண்டும் என்பதில் குறியாக இருந்தனர். 6. கதார் இயக்கத் தலைவர்கள் அனைவரும் உலகக் கண்ணோட்டத்துடன் செயல்பட்டனர். இவர்களது இலட்சியம் உலகில் பல்வேறு நாடுகளில் வாழ்ந்த இந்தியர்களைச் சென்றடைந்தது. முதல் உலகப் போரின்போது இந்தியாவில் சுயாட்சி இயக்கம் (Home Rule Movement) நடந்து கொண்டிருக்கும்போது, கதார் இயக்கம் அமெரிக்காவை நிலைக்களமாகக் கொண்டு ஆயுதக் கிளர்ச்சி மூலம் இந்திய விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்தது.